அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

— Page. No — 313

— ACC. NO. 18586.

மலர் : 8 இதழ் : 7 விலை அ 4	துன்முகி ஹு ஐப்பசி மீ அக்டோபர்-நவம்பர் '56	வருட சந்தா ரூ. 2-4-0

சம்பந்தர் பண்ணும் பாணர் இசையும் சேர்ந்து,
பரமன் அம்பலத்தில் அன்போடு பரிமளிக்கின்றது.
பெரியபுராணச் சித்திர விளக்கம் 31 (பக்கம் 293

பொருளடக்கம்

			பக்கம்
1. தாண்டவம்	(திருப்புகழ் மணி)	...	289
2 தில்லைத் தரிசனம்	(கி. வா. ஜ)	...	292
3. சின்னப்பர்	(ரசபதி)	...	297
4. ஆணும் பெண்ணும்	(வா. ராமலிங்கம்)	...	306
5. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,)			310
6. தனி யானை	(கி. வா. ஜ.)	...	318
7. ஸ்ரீ தியாகையரும் திருப்புகழ்வள்ளலும்	(V.R.G.)	...	322
8. பழனித் திருப்புகழ் விரிவுரை	(குகஸ்ரீ)	...	324
9. வித்யாபதி	(கிருஷ்ணமூர்த்தி)	...	332
10. Panchaseela of Bhakti	(Thiruppugal Mani)	...	335

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ஞு ஐப்பசி மீ அக்டோபர்-நவம்பர்—1956	இதழ் 7

தாண்டவம்

(திருப்புகழ்மணி)

தெய்வத்தைச் சார்ந்தது தவம். தெய்வ நினைவற்ற ப்ரபஞ்சத்தைச் சார்ந்தது அவம். அவத்தில் குறைகள் பல உண்டு. துன்பம் உண்டு. இன்பம் என்று நினைப்பதும், துன்பத்தின் பான்மையே யாகும். சிறுமைதான் மிக உண்டு. வேற்றுமை எனும் பேத புத்தியுண்டு. பகையுண்டு. கடைசியில் மரணமுமுண்டு.

தவத்திலோ நித்திய த்ருப்தியுண்டு. துன்பமில்லாத இன்பம் என்றைுமுண்டு. அலை பாயாத மனச் சாந்தி உண்டு. நானற்ற நடுவில் எல்லாம் தான் என்ற பேத மற்ற ஒருமையின் உணர்ச்சி யுண்டு. காலம் கடந்த இடம் உண்டு. பரமானந்தத் தகைமை யுண்டு.

இம் மாபெரும் தவத்தை உலகுக்குத் தெய்வம் நடராஜமூர்த்தியின் பூர்வமாக உபதேசிக்கின்றது. நடராஜாவின் நடனம் ஓர் ஆனந்தக் கூத்து.

தாமேவும் கல்வி, தரைமேவும் தேகம்,
பாமேவும் ராமேச் சரமெண்ணிப் பாயாதோ.

மண்ணில் ஒருகால்; விண்ணில் ஒருகால்.

"தாளொன்றால் பாதாள மூடுருவி மற்றைய
தாளொன்றால் அண்டம் கடந்துருவி-தோளொன்றால்
திசையெல்லாம் போர்த்து நடிக்குமே காளத்தி
நக்கன்தான் கண்ட நடம்"

என்றார் நக்கீரர்.

சிவன் நடிக்கும் தாண்டவம் தாள் நடவிய தவமாகும். உலகத்தில் தெய்வம் ஒன்றே யாதலால், உலகத்தில் நடிக்கப் பெறும் நடனங்க ளெல்லாம் அந்த ஏக தெய்வத்தின் நடிப்பே யாதலால், ஜீவராசிகளின் செயல்க ளெல்லாம் முடிவில் அவ னொருவன் செயலே யாகையால், நடராஜ நடனமும் ஒரே காலால் நடிக்கப்பட்டது போலும்.

ஒரு காலில் நிற்கின்றான் என்று உலக வழக்குண்டு. ஒன்றையே பிடித்து மற்றெல்லாம் மறுத்து நிற்கின்றதை 'ஹடம்' என்பர். உலகில் தெய்வம் ஒன்று. ஜீவராசிகளை இரக்ஷிக்கும் கருணையே தன் தவமாகக் கொண்டார் நடராஜா. முயலகன் என்ற அசுரனை அடக்கி, அதாவது வேற்றுமையை ஒரு காலால் அடக்கி, ஒரே காலில் அத்வைத அத்புத நடனத்தை இயற்றுகின்றார். இந்த நடனம் ஈசன் தாள் கொண்ட தவம். தாள் தவம்—தாண்டவம்.

தொண்டன் பார்த்து மகிழ்கின்றான்.

"தாள் தவ மியற்றினால், மற்ற அங்கங்களும் ஏன் தவமியற்ற லாகாது?" என்ற உறுதியைக் கைக்கொள்வான். தவமியற்றும் தாளைக் கண்ணால் கண்டு கண்ணீர் மல்கி கண் தவ மியற்றுவான். காலால் திருக்கோயில் வலம் வந்து கால் தவ மியற்றுவான். பண் பாடி ஈசனைப் போற்றி நாத் தவ மியற்றுவான். செவி

மயல்செய் மனமழித்து மங்கலமா ஞானம்
பெயல்செய் பயற்றூர்ப் பெருமாகண் பாராயோ

யால் ஈசன் புகழ் கேட்டு செவித் தவ மியற்றுவான். உலகெலாம் மணமாய் நிறைந்த ஈசனை நாசியினால் நுகர்ந்து நாசித் தவ மியற்றுவான். இவ்விதம் ஐம் பொறிகளாலும் இயற்றும் தவத்தை ஒரு வழியில் உணர்த்துகின்றது ஸ்ரீ நடராஜாவின் தாள் தவம்.

சிந்தை யெனும் சக்தியால் சிந்தித்து ஸ்ரீ நட ராஜாவுடன் ஒருமைப் படுவான். சிந்தையில், சந்தை யில் சமாதி கட்டி மகிழ்வான். சிற்றம்பலத்தில் நடிக்கும் நடராஜாவுடன் ஒருமைப்பட கலந்து நடிக்கும் அடி யார்கள் தாண்டவமே தவத்தினில் சிறந்த தவம்.

விரிஞ்சைப் பதியில் வாழும் முருகனைப் பாடிய பிள்ளைத் தமிழில் மிகவும் அழகாக மேற் சொன்ன தவங்களை விளக்கி விட்டார்.

"கண்ணால் உனது திருவடியைக்
கண்டு ஆதரவுபெருகி இரு
கையால்தொழுது உன் திருக்கோயில்
காலால் வலம்செய்து உனதுபுகழ்
பண்ணால் உருகிப்புகழ்ந்து கண்ணீர்
பாயா வெனையும் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதி வாழும்
அண்ணால் வருக......
... ...

என்று பாடினார்.

இந்தத் தாண்டவத்தை அனுபவித்த பெரியார், ஆண்டவன் கூத்தைத் தொண்டர் குழாத்திலும் வெளியிலும் கண்டு மகிழ்கின்றார்.

"உண்டுடுத்துப் பூண்டுஇங்கு உலகத்தார்போல் திரியும்
தொண்டர்வினை யாட்டே சுகங்காண் பராபரமே"

ஓம் தத் ஸத்.

சங்காட்டம் தீர்த்தருளைச் சாரச்செய் தெய்வம்வாழ்
செங்காட்ட நற்குடியிற் சேரா திருப்பதுவோ.

தில்லைத் தரிசனம்

(கி. வா. ஜ.)

ஆளுடைய பிள்ளையார் திரு நனி பள்ளியிலிருந்து அருகில் உள்ள பல தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடினார். அப்பால் சீகாழிக்கு வந்து அருகில் உள்ள தலங்களுக்குச் சென்று சென்று இறைவனைத் தரிசித்துப் பதிகம் பாடி மீண்டார்.

திரு எருக்கத்தம்புலியூர் என்னும் ஊரில் யாழ் வாசிப்பதில் வல்ல திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற பாணர் இருந்தார். அவர் சிறந்த சிவனடியார். அவருடைய மனைவியார் மதங்க சூளாமணியார். அவர் இசை பாடுவதில் வல்லவர். திருஞான சம்பந்தப் பிள்ளையாருடைய பெருமையைக் கேள்வியுற்ற அவ்விருவரும் அவரைத் தரிசித்து இன்புறும் பொருட்டுச் சீகாழிக்கு வந்தார்கள். அவர்கள் வருவதை அறிந்த சம்பந்தப் பெருமான் எதிர்கொண்டு வந்து அழைத்துச் சென்றார். பெருமானுடைய அடியில் வீழ்ந்து வணங்கிய யாழ்ப்பாணரும் அவர் மனைவியாரும் பிள்ளையாரைத் தொடர்ந்து செல்ல அவர் சிவபெருமான் திருக்கோயில் புகுந்தார். அங்கே திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழை மீட்டி இறைவன் துதிகளைப் பாட மதங்கசூளாமணியாரும் அவருடன் பாடினார். ஒன்றோடு ஒன்று இணைந்து இசைந்த அந்த இசையைக் கேட்டு யாவரும் வியப்பு அடைந்தார்கள்.

பின்பு பிள்ளையார் யாழ்ப்பாணரை அழைத்துச் சென்று அவருக்குத் தனியே இருக்கை அமைத்துக் கொடுத்து விருந்து செய்வித்தார். பெறுதற்கரிய பேறு பெற்றதாக எண்ணி இன்புற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர், சம்பந்தப்பிரான் அருளிய திருப்பதிகங்களை யாழிலே வாசித்துக் காட்டினார். அவர் பிள்ளையாரை வணங்கி, "எனக்கு ஒரு வரம் தர வேண்டும்" என்றார்.

பாம்புவிடம் தீர்த்துமணப் பயனளித்த மருகல்துரை
ஆம்புவியின் மாயைவிடம் அகற்றியெனை ஆளாதோ

"என்ன அது?" என்று சம்பந்தர் கேட்க, "தேவரீர் பாடும் திருப்பதிகங்களை அவ்வப்போது யாழில் வாசிக்கும் பாக்கியத்தை எனக்கு வழங்க வேண்டும். எப்போதும் உடனிருந்தே இப்பணியைச் செய்து வருவேன்" என்றார். சம்பந்தப் பெருமான் அவ்வாறே செய்யலாம் என்று இசைந்தார். அது முதல் சம்பந்தர் எங்கே சென்றாலும் உடன் சென்று அவர் பாடும் பதிகங்களை யாழிலே பொருத்திப் பாடி இன்புற்றுப் பிறரையும் இன்புறச் செய்து வருவாராயினார்.

ஒருகால் ஆளுடைய பிள்ளையாருக்குத் திருத் தில்லை சென்று ஆனந்தத் தாண்டவ மூர்த்தியைத் தரிசனம் செய்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. அதை உடனிருந்தவர்களிடம் தெரிவிக்க, அவருடைய தந்தையாரும் பிறரும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர்.

பிள்ளையார் தோணிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானைத் தரிசித்துக்கொண்டு திருத் தில்லைக்குப் புறப்பட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் தந்தையாரும் உடன் வர அடியார்கள் புடை சூழ இடையிடையே உள்ள திருக்கோயில்களைத் தரிசித்துக்கொண்டு கொள்ளிடக் கரை வந்தணைந்தார். அந்த ஆற்றைக் கடந்து தில்லையின் எல்லையை அடைந்தவுடன் பணிந்து எழுந்து உள்ளே புகுந்தார்.

தெற்குத் திருவாயிலின் வழியே புக எண்ணியபோது தில்லை வாழ் அந்தணர்கள் அவர் வரவை அறிந்து எங்கும் மங்கலப் பொருள்களை வைத்து அலங்காரங்களைச் செய்து எதிர்கொண்டார்கள். வேத நாதமும் மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தன. அவர் புடை சூழத் திருவீதி வழியே சென்று எழுநிலைக் கோபுரத்தைப் பணிந்து அதன் வழியே ஆலயத்துள்ளே புகுந்தார். திருப் பேரம்பலத்தைத் தரிசித்துக்கொண்டு திருச்சிற்றம்பலத்தை அணுகினார். சிவபெருமான் தமக்கு வழங்கிய மெய்ஞ்ஞானமே வடிவான

சேர்த்தஅங்கை யாளருளம் சேர்ந்தே களியருளும்
சாத்தமங்கை யப்பாஉன் சரண்சார்வ தென்றேயோ

அம்பலத்தில், தம் உள்ளே என்றும் தோற்றும் ஆனந்தப் பெருங்கூத்தைக் கண் முன்னே கண்டு கும்பிட்டு ஆனந்தக் கடலில் திளைத்தார். 'உணர்வினால் அறிவதற்கரிய சிவ போகத்தை, இந்த உடம்பிலே உள்ள ஐம்பொறிகளுக்கும் விஷயமான திருவுருவக் கோலத்தைத் தரிசிக்கப்பெற்ற அளவில் எளிதில் பெறும்படி திருவருள் புரிந்தாய்' என்று போற்றித் திருப்பதிகம் பாடலானார். அந்தத் திருப்பதிகத்தில் தில்லைவாழந்தணர்களின் பெருமையைச் சிறப்பித்தார்.

"கற்றாங்கு எரிஓம்பிக் கலியை வாராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பலம்"

என்று பாடினார். பதிகம் பாடி ஆனந்தக் கூத்தாடினார். பிறகு சிற்றம்பலத்தை வலங்கொண்டு புறம் போந்து அத்தலத்தில் தங்க அஞ்சி அருகில் உள்ள திருவேட்களம் சென்று தங்கினார். அங்கிருந்து நாள்தோறும் தில்லைக்கு வந்து ஆனந்தக் கூத்தனை ஆராத காதலுடன் தரிசித்துச் சென்றார்.

திருவேட்களத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானையும் பதிகம் பாடிப் போற்றினார். அப்பால் அருகில் உள்ள திருக்கழிப்பாலைக்குச் சென்று போற்றிப் பதிகம் பாடினார். அவற்றைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிலே இசைத்துப் பாடினார்.

ஒரு நாள் வழக்கம்போல் திருத் தில்லைக்குள்ளே புகும் போது, இறைவன் திருவருளால் தில்லைவாழ் அந்தணர் அனைவரும் கணநாதராகத் தோற்றினார்கள். அதைக் கண்டு அதிசயித்த பிள்ளையார் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் அக்காட்சியைக் காட்டினார், தில்லைவாழந்தணர் பெருமையைப் பின்னும் வியந்து பாராட்டியபடியே திருச்சிற்றம்பலத்தை அடைந்து, "ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்" என்ற திருப்பதிகம் பாடினார். அதில் தில்லைவாழந்தணரைப் பலபடியாகச் சிறப்பித்தார்.

வருமோகைப் புண்டரிகர் வாழ்மேனி கலப்பித்த
திருநாகைக் காரோணம் தேற்றியெனை ஏலாதோ

இப்படிச் சில நாள் சென்ற பின் மற்றத் தலங்களையும் தரிசிக்கும் அவா மீதூறத் திருவேட்களத்தினின்றும் புறப் பட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய ஊராகிய திரு எருக்கத்தம்புலியூர் சென்று வழிபட்டுப் பதிகம் பாடி வேறு பல இடங்களுக்கும் போய்த் தரிசித்தார். திருமுதுகுன்றத் துக்குச் சென்று பழமலை நாதரைத் தரிசித்துப் பாமாலை சாத்தினார்.

முன்பெல்லாம் ஒவ்வொரு சமயம் தம் தந்தையாருடைய தோளின்மேல் ஏறிச் செல்வது வழக்கமாக இருந்தது. பிறகு அப்படிச் செய்யாமல் நடந்தே செல்லத் தொடங்கினார் பிள்ளையார். திருநெல்வாயில் அரத்துறை என்ற தலத்துக்குச் செல்ல எண்ணிப் புறப்பட்டபோது அவருடைய தாள்கள் நோவுற்றன. ஆயினும் இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற காதல் மீதூர்ந்தமையால் அதைப் பொருட்படுத் தாது நடக்கலானார். இடையே மாறன்பாடி என்ற ஊர் வந்தது. வழிநடை வருத்தம் மிகுதியாக இருந்தமையால் அன்று இரவு அங்கே தங்கினார்.

பிள்ளையார் தாமரை இளவிதழ் போன்ற அடிகள் நடந்து வருந்துவதைப் பொறுத சிவபெருமான் அதை மாற்ற எண்ணினார். முத்தினாலே சிவிகையும் குடையும் திருச் சின் னங்களும் திருநெல்வாயில் அரத்துறைக் கோயிலில் வைத்து, அவ்வூரில் உள்ள மறையவர்கள் கனவில் தோற்றி, "திரு ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான். முத்துப் பல்லக் கும் முத்துக் குடையும் திருச் சின்னமும் ஆலயத்தில் உள் ளன. அவற்றைக் கொண்டுபோய் அவனிடம் அளியுங் கள்" என்று பணித்தான். கனவு கண்ட அந்தணர்கள் விழித் தெழுந்து ஒவ்வொருவரும் தாம் கண்டதைத் தமக்குள் கூறி வியந்தார்கள். உடனே திருக் கோயில் செல்ல, அங்குள்ள வர்களும் அவ்வாறே கனவு கண்டவர்களாதலின், அவர்க ளும் வியந்த வண்ணம் அந்தணாளரைக் கண்டு ஆலயத்துட் புகுந்து பார்க்க, அங்கு முத்துச் சிவிகை முதலியவை இருப் பது கண்டு இறைவன் திருவருட்பெருமையை நினைந்து

சிக்கல்போக் கைத்தவிர்க்கும் சிறந்தவெண்ணெய் லிங்கமெனும்
சிக்கல்என் சித்தம்தன் சினகரமாக் கொள்ளாதோ.

உருகி வாழ்த்தினர். சிவிகை முதலியவற்றை இறைவன் பணித்தபடியே எடுத்துச் சென்றனர்.

இறைவன் சம்பந்தப் பெருமான் கனவிலும், "முத்துச் சிவிகை முதலியன வரும். நாம் மகிழ்ந்து அளிக்கும் அவற்றை ஏற்றுக்கொண்டு உபயோகப் படுத்திக் கொள் வாயாக" என்று பணித்தான். இக்கனவை அவர்தம் தந்தை யார்க்கும் பிறர்க்கும் சொல்லும்போதே இருள் நீங்கிப் பொழுது புலர்ந்தது.

அஞ்செழுத்தை ஓதி எழுந்து கடன்களை முடித்துக் கொண்டு வீற்றிருந்தார் பிள்ளையார். அப்போது ஹர ஹர என்ற பெரு முழக்கத்துடன் முத்துச் சிவிகை முதலிய வற்றை எடுத்துவந்த அந்தணர்கள் அங்கே வந்து சேர்ந் தார்கள். பிள்ளையாரை வணங்கி இறைவன் கட்டளையைக் கூறவே, இறைவனைத் தொழுது "எந்தை ஈசன்" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். பின்பு சிவிகையை வலம் வந்து திருவைந்தெழுத்தைச் சபித்தபடியே உலகமெலாம் உய்ய அதன்மேல் ஏறியருளினார்.

அப்போது தொண்டர்கள் ஆர்த்தனர். வேதம் முழங் கியது. தேவர்களும் விண்ணுலகத்தி லிருந்தபடியே ஆர்த் தனர். பாற்கடலில் வெண்மதி தோன்றினாற்போல முத்துச் சிவிகையில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் எழுந் தருளினார்.

இருமருங்கும் திருச்சின்னங்கள். ஒத்த அந்தணர் வாழ்த் தெடுப்ப அடியார்கள் போற்றிசெயச் சிவிகை திருநெல் வாயில் அரத்துறையை அடைந்தது. கோயிலுக்குமுன் சிவி கையினின்றும் இழிந்த பிள்ளையார் ஆலயத்துட் சென்று, "என்னையும் பொருளாக இன்னருள் புரிந்தருளும் பொன் னடித்தலத் தாமரை போற்றி" என்று இறைவனைத் துதித் தார். கைகுவித்துக் கண்ணீர் வாரப் பதிகம் பாடினார். சில நாள் அங்கே தங்கி அருகில் உள்ள சில தலங்களைத் தரிசித் துக் கொண்டு மீண்டும் சீகாழியை வந்தடைந்தார்.

கோளுரும் வாழ்க்கை குமைந்து குலையுமுனே
வேளூராய் என்னை விரைந்தேற்க வாராயோ

முருகனடியார் 19.

சின்னப்பர்

(ரசபதி)

மங்கலங்கள் எட்டு; பள்ளிகள் பன்னிரண்டு; ஊர்கள் நூறு, பழனியைச் சுற்றியிருக்கும் பழம் பதிகள். நலம் சிறந்த அவை களுள் ஒன்று, **நாயக்கன் பட்டி.**

வளம் நிறைந்தவர் அவ்வூர் வடுகர்கள். **சின்னேவள்** எனும் தேவதையை, வடுகர் என்றும் வழிபடுவர். அவர்களுள் ஒருவர், கல்வியிற் சிறந்தார்; கேள்வி அறிவு கெழுமினர்; ஒழுக்கத்தில் உயர்ந்தார்; சின்னேவள் ஐயன், சின்னேவையன், சின்னேபா என்றெல்லாம், அவரை அன்பொடு மக்கள் அழைத்தனர். **பிரமஸ்ரீ மகா மகோபாத்யாயர் உ. வே. ஸ்வாமிநாதையர்** அவர்கள், அவர் பெயர் **சின்னப்ப நாயக்கர்** என்று அறிவிக் கிறார்கள். அதனல், அப்படியும் அவர் பெயர் வழங்கி யிருந்தது என்று அறிகிறேம்.

மாதங்கி யென்பது, சின்னப்பரின் மனைவி பெயர். இருவர் தம் இல்லற நல்லறம் இனிது நடந்தது. நாள் தோறும், மாபெரும் பழனியைத் தம்பதிகள் சேவித்து மகிழ்ந்தனர். தண்டபாணிமேல், பக்தர் சின்னப்பர் பாடிய பாடல்களும் பலவுள.

* * *

குழப்ப நிலை

தர்மம் நிறைந்தது தமிழ் நாடு. காலக் கொடுமையோ, யாரிட்ட சாபமோ, சில சில சமயங்களில், பல கோணங்களில் வம்பும் தும்பும் பம்மி யெழுந்த வரலாறுகளும் பலவுள.

சின்னப்பர் காலத்தும், தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் சிறு சிறு குற்றங்கள் சிலிர்த்தன. வரவர, அது மலையாகி வளர்ந் தது. கொள்ளையும் கொலையும் கொலு நடத்தின. குடி மக்கள் குமுறினர். எழுந்து சீறினர்; எதிர்த்து நின்றனர். அதன் பய ஞக, கலகம் பலத்தது; ஏக்கம் வலுத்தது. பாவம், ஒன்றும் அறி யாத பலர் பலியாயினர். அபலைகள் எங்கும் அஞ்சி அலறினர்.

சிந்தனையும் செயலும்

வேந்தர் பலர் இவைகளை ஓர்ந்தனர்; படைகளைத் திரட்டி னர்; அநியாய கலகங்களை அடக்க, மூண்டு இடையருது

பாவூர் கவுதமரும் சுரகுருவும் பாராட்டும்
தேவூரா! என்சித்தம் திரைகொள்ள வாராயோ

முயன்றனர். சின்னப்பர் இது குறித்து சிந்தித்தார். மயங்கி வருந்தியது அவர் மனம்.

மனையாளுடன் சென்ருர். வாழ்விக்கும் பழனியை வழிபட்டார். இல்லம் திரும்பினர்; இரவு மணி ஒன்பது.

மணி யாயிற்று; உணவு கொள்ளலாமே என்ருள் மனையாள்.

மாதங்கி! நாடு நலிகிறது; உண்டு உடுத்து உல்லாசமாக இருப்பது, நல்லவர்க்கு நலமல்ல. குல வழக்கப்படி, பயன் தரும் வாள் வித்தையில் எனக்கு நல்ல பயிற்சி யிருக்கிறது. மன்னருடைய சேனைகளில் ஒருவனுக சேரப் போகிறேன். அக்கிரம கலகங்களை அடக்குவேன். தூய திருவருள் துணைபுரியும். நான் திரும்பும் வரை, நம்பனையே நம்பி யிரு!

ஸ்வாமி! எண்ணம் கண்ணிய மானது; எனினும், வெற்றியும் தோல்வியும் ஒருபால் இராது அல்லவா! பெண் மனம்; அதனுல் நெஞ்சம் சிறிது அஞ்சுகிறது.

பயித்தியக்காரி! சித்தம் எப்பொழுதும் சிதைவதே கூடாது. இறப்பும் பிறப்பும் இயற்கை நியதி. இதனிடையில், வாழ்க்கை ஒரு பிள்ளை விளையாட்டு. தெரிகிறதா! செய்யும் செயல்களால் வரும் அரிய புண்ணியம் ஒன்றே, ஆத்ம சாந்தியை அளிக்கும்.

அருள் நிறைந்த சேரர்கள், ஒரு காலத்தில் கொங்கு நாட்டை ஆண்டனர். மற்ருெரு காலத்தில் இந்நாடு, பாண்டியர் கைக்கு மாறியது. சோழர்கள் ஒரு காலத்தில், இதைத் தம் சொந்தம் ஆக்கினர். அவர்கள் வரலாறு என்ன ஆயிற்று?

கொங்கு நாட்டுள் 24 சிறு நாடுகள். அவைகளுள் ஒன்று வையாபுரி. இதை ஆண்ட வையாபுரிக்கோ, வேள் ஆவிக்கோ முதலிஞேர் சரித்திரம் என்ன ஆயிற்று? அந்த முடிசார்ந்த மன்னர் வாழ்வு எல்லாம், ஒரு பிடி சாம்பராகிப் போயிற்று. இன்று வைகாவூர் மன்னர், விஜய கோபால துரை.

அடடே! ஏன் அழுகிருய்? அடி அசடே! இதுதான் உலகம்! எதிர்நாளில் நம் வரலாறும் இப்படித்தான் ஆகும்.

ஸ்வாமி! வாழ்க்கையின் நிலையாமையை, ஆ! மக்கள் எப்படி மறந்து விடுகின்றனர்!

மாதங்கி! அவர்கள் ஏன் உணர்வதில்லை என்ற ஆய்வு வேண்டா! நாம் சிந்தனை செய்வம்! செயலில் இறங்குவம்! வாக்கு மனம் காயத்தால் இறைவனை வழிபடுவம்; இயன்ற வரையில்

எள்ளிபல தீவினைகள் என்னை யொடுக்குமுனே
பள்ளிமுக் கூடலுறை பரமா அருளுதியோ

பிறர்க்கு உதவி புரிவம்; பண்ணிய பயிரில் புண்ணியம் விளையும். இரவில் நெடுநேரம் பேச்சு இப்படியே நீண்டது.

பொழுது விடிந்தது. கடனை முடித்தார். நீராடினர். பழனித் துரையே! அமைதியை மக்கள் அடைய, வழிசெய் என்று வழுத்தி னர். மாதங்கியிடம் விடைபெற்றார். புனித மனத்தொடு புறப் பட்டார்.

* * *

முயல்வு நிலை

பழனிக்கு இரண்டு மைல் தூரத்தில், பாலசமுத்திரம் என்னும் பதி. விஜய கோபால துரை என்னும் வேந்தர், அங்குள்ள எடுப் பான அரண்மனையில் இருக்கிறார். தக்கவர் மூலம், சின்னப்பர் சென்று அரசரைச் சேவித்தார்.

திரண்ட தோள்கள், பரந்த மார்பு, கனிவு காட்டும் கண்களை யுடைய சின்னப்பரின் கம்பீர தோற்றம், காவலர் கருத்தைக் கவர்ந்தது.

அதன் பயனாக, சின்னப்பர் சேனை வீரர்களுள் ஒருவராகச் சேர்ந்தார். வாள் வலியும் தோள வலியும், அதிவிரைவில் அவரைச் சேனைபதி ஆக்கியது. ஆழ்ந்து அகன்ற அறிவாலும், தெய்வத் துணையாலும், உறுத்த கலகங்களை ஒடுக்கினர். அமைதியை நாடு அடைந்தது. பூரித்த மன்னர், இது கண்டு புள கித்தார். பலபட சின்னப்பரைப் பாராட்டினர். அவரைத் தன் அந்தரங்கத் தோழரும் ஆக்கினர். அதன் பின் சின்னப்பர், கண் ணானர்; அரசர்க்குக் கவசமும் ஆயினர்.

* * *

வளரும் சூழ்நிலை

எந்த விவகாரத்தில் இருக்கின்ற போதும், வையாபுரி ஆண் டவா! தண்டபாணி! என்று, வாய் பழனியானை வாழ்த்தும்; இத யம் அந்த இறைவனை எண்ணும்; திருநீறு மேனியில் திமிதமிடும்; விரல்களில் ஜபமாலை உருளும்.

வேந்தர் வயோதிகர். மன்னர் கால்வழி மைந்தர்களும் இல்லை. சிந்தனையும் செயலும் சிறந்த சின்னப்பரைக் காணும்போ தெல்லாம், இவரே எதிர்காலக் காவலர் என்று கருதியது மன்னர் மனம்.

தண்ணீர் விளக்கெரித்த நமிநந்தி தகவறியாக்
கண்ணீர்என் காணிக்கை! ஆரூரா காணாயோ

ஒருநாள், வித்தகமான தன் கருத்தை, காவலர் சபையில் வேந்தர் வெளியிட்டார். அதைக் கேட்ட சின்னப்பர் தேகம், ஆடிக் குலுங்கி அதிர்ந்தது.

நானா? மன்னனாகவா? நிம்மதியான மனம் நிலைகுலையும், வாய்த்த பொறுப்பு வளரும்; பழனியாண்டவர் வழிபாட்டிற்கு, இது பல வகையில் இடையூறு. என்னை மன்னித்து, வேறு எவரையேனும் தேர்ந்தெடுக்க வேண்டுகிறேன்! என்று, படபடத் தார் சின்னப்பர்.

பலபடத் தடுத்தும் பயனில்லை; மாபெரும் குடிகள், மன்னர் கருத்திற்கே மதிப்பளித்தனர். இனிமேல் மன்னர் சின்னப்பர் என்று, பேச்சுகள் நாடு முழுவதும் பெருகின.

* * *

இரவு ஒருமணி. நல்ல நித்திரை. அப்படியா அப்பா! என்று சின்னப்பர் அலறி எழுந்தார்.

திடுக்கிட்டு எழுந்த தேவி, ஸ்வாமி! ஏன் இப்படி அலறு கிறீர்கள்?

மாதங்கி! நான் ஆண்டவன் சந்நிதியில் அடிமைப் பணிசெய்ய ஆசைப் படுகிறேன்; என் கனவில் எழுந்தருளி, அரசனாக இரு என் கிறான் ஆண்டவன்!

ஸ்வாமி! மயிலூரும் பெருமான் ஆணையை மறுக்கலாமா? அரசரே ஆனாலும், ஆண்டியாக இருந்தாலும், ஆண்டவனுக்கு இந்த ஆன்மா அடிமை என்னும் நினைவு நியதியில் நிற்க முடியும் அல்லவா!

பேஷ் பேஷ்! இப்படி அறிவு கற்பிக்கும் மாபெரும் மனைவி வாய்ப்பதானால், துறவியும் இல்லறத்தான் ஆகலாம் என்று சிரிப் பாய்ச் சிரித்தார் சின்னப்பர். நாணத்தால் தலை குனிந்தாள் நங்கை.

* * *

ஆட்சியின் மாட்சி

மங்கல நாளில் மகுடாபிஷேகம் நடந்தது. முன்னைய மன் னர், இன்றுமுதல் சின்னப்பர் அரசர் என்றார். இன்றைய அரசர் சின்னப்பர்; பழைய மன்னர் பெரியப்பர் என்று பாராட்டியது ராஜ சபை.

சின்னப்பர் காலத்தில், ஆன்றோர் நிறைந்த ஆலோசனை சபை அமைந்தது. நிர்வாகத் திறமை நீடித்தது.

களமர் பணியினிலும் கனிந்துகனிந் தேத்தவுறு
விளமர் பதியை விழிமகிழக் காணேனோ

உண்மை உள்ளத்தில் ஊன்றினால், வாயில் வருவது வாய்மை யாகும். அதன் பிறகுதான் மெய் வாழ்க்கை மேவும். நலம் சிறந்த அந்த வாழ்க்கையில், அருள் நடமாடும். அதற்கு வழி காட்டுவது ஆஸ்திகம். மக்கள் மனத்தை அப்படித் திருத்துவது தான் அறம். என்ன சொல்கிறீர்கள்? என்று, ஆலோசனை சபை யில், ஒரு நாள், சிறந்த ஒரு கேள்வியைச் சின்னப்பர் எழுப்பினர்.

ஆம் ஆம் அதுதான் சரியென்று, அந்த மன்றம் ஆமோ தித்தது.

* * *

வழிபாடு

ஆவினன் குடியில் பேரருள் வழங்குகிறார் பெரிய நாயகி; லட் சுமி நாராயணர்; ஜகன் மோகன வேணு கோபாலர்; பட்டத்து விநாயகர்; முத்தர் போற்றும் முத்துக் குமாரர் திருக்கோயில் களில், வளர்ந்து பெருகும் பல திருப்பணிகளை சின்னப்பர் வளர்த்தார்.

வருவதும் போவதும் வையகத்து வழக்கம், நான் மட்டும் போகேன் என்று, மலைமேல் போகர் இருக்கிறார். பழனி மலையில், சேரமான் பெருமாள் அமைத்த ஆலயப் பகுதிகள் பலவுள.

பாத விநாயகர், சேர விநாயகர், சுப்ரமண்ய விநாயகர், வைகாபுரித் துரை, குராவடி வேலர், இடும்பன், தண்டாயுதபாணி சந்நிதிகளில், அளவிறந்த திருப்பணிகளை ஆற்றினார். நித்திய விழா, விசேட கால விழாக்களை விரிவு படுத்தினார். பாவலர் பல ரைப் பரிந்து அழைத்தார். பல பாடல்களை, மூர்த்திகள் மேல் பாடச் செய்தார். பல பாடல்களைத் தானும் பாடினார். ஒவ் வொரு விசேட காலத்தும், நியதியாக சொற்பொழிவுகள் நிகழச் செய்தார்.

குதூகலித்து மக்கள் கூடினர். திருவருள் நுட்பங்களைத் தெளிவு பெறக் கேட்டனர். அதன் பயனாக, ஆலய வழிபாடு அதி கரித்தது. எந்த நேரத்தும் பஜனை; எங்கும் அரஹர முழக்கம். உணர்ச்சி வசப்பட்டு எவரும் உள்ளம் உருகினர்.

பக்தி வழிபாடு பலித்தது. பெருமழை காலத்தில் பெய்தது. செல்வம் செழித்தது. எங்கும் நன் மக்கள் பேறு. இங்ஙனம் மக் கள், அன்பு மிக்க இன்ப வாழ்வை எய்தினர்.

மக்கள் அமைதியாக வாழ வழி செய்த இது அல்லவா அரச தருமம்! மகிழ்ந்தது பழைய மன்னர் மனம்; வாயார சின்னப்

சிரவீரச் சுராசுரர்கள் சேர்ந்துவலம் செய்யும்
கரவீரம் காணுமதி கண்ணுதல் நீ காட்டாயோ

பரை வாழ்த்தினர். பல நாள் இதைக் கண்டு களித்த அந்தக் காவலர், ஒருநாள் காலம் வந்து கண் மூடினர்.

சின்னப்பர் முதல், குடிகள் அனைவரும் குமுறினர். தானே புத்திர ஸ்தானத்தில் இருந்து, மன்னர் விஜய கோபால துரைக்கு, இறுதிச் சடங்கை நலம் பெற சின்னப்பர் நடத்தினர்.

இது என்ன தொல்லை?

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார், தமிழ் நாட்டில் பிரவேசித்தனர். அவர்களுடைய ஆட்களில் பலர், குரூரமான குணமுடையோர். திடீர் திடீர் என்று குக்கிராமங்களில் குபுகுபு என்று புகுந்தனர். அவர்கள் செய்த அட்டூழியங்கள் பல. செல்லும் இடமெல்லாம் அநாசாரம் செய்தனர். மக்கள் அலறினர். அழுத பிள்ளையும் வாய் மூடும் அளவு, அச்சம் நாட்டில் அதிகரித்தது.

வழிபாட்டில் வந்த இடர்

பழனியில் பங்குனித் தேர் விழா. அபிடேகம் அலங்காரம் ஆனபின், உமையாள் குமரன் உலா வந்தான். அன்பர்கள், எம் பெருமானைத் தேர்மேல் ஏற்றினர். கர்பூர ஆர்த்தி காட்டினர். வாழ்த்திய அன்பர் ஒலி வானளாவியது.

பங்குனித் தேரேறிப் படிவளஞ்செய் தேயருளும்
சங்கரனுர் மைந்தனெனும் தற்பரவோம் சிற்பரனே!
செங்கமலங் கருங்குவளைச் செல்வியர்தம் மணவாளா!
இங்கெழுந்தாய் வேலாயெம் இடரழிந்த தின்றேடே

என்று தொழுத கை தலைமேல் ஏற, பரம பக்தியொடு வாய் பாட, சின்னப்பர் மெய் புளகித்து நின்றார். அனைவரும் வடம் பிடித்துத் தேர் இழுக்கும் நேரம்.

ஓஹோ! என்ன இது? ஏன் இப்படி ஓடுகிறார்கள் எல்லோரும்? பாவம்! தடுக்கி விழுந்து எழுந்து தலை தெரிக்க ஓடுகிறார்களே! ஐயோ! அம்மா! அப்பா! அக்கா! தம்பி! மகனே! அண்ணா என்று குமுறிக் கூவி அலறுகிறார்களே! ஓலம் அதிகரித்தது. சிதைந்து எவரும் ஓடுவதைச் சின்னப்பர் கண்டார். அவர் முன், உடல் உதற, இதயம் பதற ஓடி வந்தான் ஒருவன்.

அரசே! கொடியவர்களான கும்பினி யாட்கள், இதுவரை இந்தப் பக்கம் வந்தது இல்லை. இன்று வருகிறார்களாம். தாங்களும் சிலநாள் தலை மறைவாயிருப்பது தக்கது; அவ்வளவுதான்! என்று சொல்லிவிட்டு அவனும் ஓடினன்.

கருவேளூர் தன்வினைகள் கழிய வழிபட்ட
பெருவேளூ ராயுனையே பேச அருளுதியோ

சின்னப்பர் கண்ணீர் சிந்தினர். தமிழ் நாடே! எங்கே உன் வீரம்? மக்கள் இவ்வளவு தூரம் கோழைகளாக மாறினரே! அர்ச்சகர் முதலிய எவரும் இங்கு இல்லை. ஒப்பாரும் இல்லாத பழனியப்பா! நீரும் நானும் இங்கு நிற்கிறோம். ஆறிலும் சாவு; நூறிலும் சாவு; யாது விளைந்தாலும் சரி!

குமரேசா! உன் திருவிழா குறைவு பெறுவது கூடாது. வாழ்விக்கும் மாடவீதியில் உன் தேர் வலம் வந்தே ஆகவேண்டும்! அது வரை நலம் சிறந்த இந்த இடம் விட்டு நகர மாட்டேன்! அருளாயா அத்தா! ஏழையேற்கு இரங்காயோ பெருமா?

இந்திரன் குடைபிடித் திட, அழல் கடவுள் வந்(து)
எதிர் நின்று விசிறி வீச
இயமனுடன் திருவெண் சாமரைகள் முறை முறை
இரட்ட வருணன், வாயுவும்
சந்திரனும் உடைவாளை ஏந்திநின் றிருபுறம்
தாம்நிற்ப, அளகை வேந்தன்
தயவினோடு காளாஞ்சி யேந்த, ஈசானனிது
சரியென்று முறுவல் கூர,
மந்திரப் புனல்கொண்(டு) அருச்சித்து வேதன்முதல்
மறைமுனிவர் துதிகள் செய்ய,
வானகத்(து) அமரர் தரு மலர்பெய்ய, மழுகதிர்
மறைத்தகார் மழைகள் பெய்யச்
சிந்தனை மகிழ்ந்து நவ மணியினுல் ஒளிர்கின்ற
சிறுதேர் உருட்டி யருளே!
தென்பழனி நகரிவரு சிவகிரியின் முத்தையன்
சிறுதேர் உருட்டி யருளே

என்று உள்ளம் உருகி ஓதினர்.

ஆ! ஆ! என்ன வியப்பு! தெருண்டு உருண்டது தேர். கண்டு ததும்பியது கண்ணீர். பழனித் துரையே! முத்துக் குமரா! எளியேன் பாடல் உவந்தீரா! இரக்கம் கொண்டு எழுந்தீரா! வாரும் வாரும் பிரபு! வாரும் என்று வழுத்தினர். பாடும் பாடல் பதங்களை, மாட வீதியில் உணர்ந்து ஓதி சின்னப்பர் முன் போக, தொடர்ந்து வருகிறது, ஆடி அசைந்து அருமைத் தேர். அன்பை உகந்தவன் முருகன் என்பது, பயனுள ஆஸ்திகப் பழமொழி. அதற்கு ஏற்ப, மூன்று பாடல் முடிந்தது. நிலையில் தேர் வந்து நின்றது.

பல்லாண்டைச் சேந்தனர் பாட, அன்று தில்லைத் திருத் தேர் நடந்தது. இன்று சின்னப்பர் பாடும் தேர்ப்பாடல் கேட்டு, பரமன் திருத்தேர் பழனியில் நடந்தது. என்ன அருமையான வரலாறு இது!

புலையாலம் காட்டும் பொத்தலுடல் பொன்றுமுனே
தலையாலங் காடாஉன் தாள்தலையில் வையாயே

தேரில் இருந்த ஸ்வாமியை, சின்னப்பர் தாமே இறக்கினர் தோளில் சுமந்தார். ஆலயத்துள் சென்றார். அபிஷேகம் முதலி யன நடத்த, அங்குதான் அர்ச்சகர் எவரும் இல்லையே!

குமரா! குகா! அமரா! என் செய்வேன் எளியேன் என்று, ஆவென்று கதறி அழுதார். ஆ! தன்னை மறந்த பக்தி என்பது இதுதானே?

முன் பாடியது தேர்ப் பருவம். அப்படியே பயனை பிற பரு வங்களையும் பாடு! அதுவே எமக்கு, தயிலம், மஞ்சள் காப்பு, பால், தயிர், தேன், நெய்,கருப்பஞ்சாறு,இளநீர்,நற்கந்தம், திரு நீறு, பஞ் சாமிர்தமாதிய அபிஷேகம். ஆம். ஆம். பாவனை முதிர்வில் பாடு வதே பாடல்! பாடு! பாடு! அதுவே எமக்குப் பரம திருப்தி என்று, பெருகிய அமுதமொழி விண்ணில் பிறந்தது.

வேத நாதம் விழைவது போல், எளியேன் பாடல், உமையாள் சுதனே! உமக்கு விருப்பம் அளித்ததுவோ! பாடுகிறேன் பிரபு! பாடுகிறேன்! நீ பாட வைத்தால் உன்னைப் பாடாதார் உளரோ! என்று உள்ளம் குளிர்ந்து உருகினர்.

ஆரம்பத்தில் காப்புப் பருவம் பாடிக் களித்தார். 'திரு மருவு பழனிவளர் சிவகிரியின் முருகனே செங்கீரை யாடியருளே' என்று செங்கீரை பாடிச் சிரித்தார். 'தமிழால் உயரும் சிவமா மலையாய் தாலோ தாலேலோ' என்று தாலப் பருவம் பாடித் தாண்டவம் செய்தார். 'சதுமறைகள் பரவவரு பழனிமலை முருகனே சப்பாணி கொட்டியருளே' என்று சப்பாணி பாடி சந்தோஷித்தார். 'பழனி வளர் சிவகிரியில் மருவு குரு தேசிகன் பவளவாய் முத்தம் அருளே' என்று முத்தம் பாடி முறுவலித்தார். 'வடிவேல் முருகா வருகவே!' என்று வருகை பாடி உருகினர். 'அருள் பரவு முருக னுடன் அம்புலீ ஆட வாவே!' என்று அம்புலிப் பருவம் பாடி ஆநந் தித்தார்.

'திருவாவினன்குடிப் பழனிமலை முருகனே சிறுபறை முழக்கி யருளே!' என்று சிறுபறைப் பருவம் பாடி மெய் சிலிர்த்தார். 'அமலா பழனிச் சிவகிரி வாழ் அரசே சிற்றில் அழியேலே!' என்று சிற்றில் பாடித் துள்ளினர். முதலில் பாடிய சிறுதேர்ப் பருவத்தை இறுதியில் சேர்த்தார்.

பாடி முடிந்ததும், கலகல என்ற இன்ப நகை கடவுள் சந்நிதியில் எழுந்தது. வீழ்ந்து வணங்கினர்; ஆலயத்தை விட்டு வெளி வந்தார். அநாசார மிலேச்சர்கள், அற்புத பழனியைச்

மடவாயும் பாழ்மனமும் மங்காத வாழ்வுபெற
குடவாயில் கோவேமெய்க் குறிப்புணர்த்திக் கூடாயோ

சூழ்ந்து ஆரவாரிப்பதை அறிந்தார். அவரையும் அறியாமல், பெருகிய ஆவேசம் அவரிடத்தில் பிறந்தது. பழனி அடிவாரத்தில் வந்தார். விரைந்து பரிமேல் ஏறினர். முருகவோ முருகா! என்று, உருவிய வாளும் கேடயமும் ஆக உருத்துச் சென்றார்.

டக் டக்! டகடக்! டகாக்! டகாக்! டாக்! டாக்! ஆ! என்ன வேகம்! பாய்ந்து மிலேச்சரை நோக்கி வருகிறது பரி. என்ன இது? படை பலம் மிகுந்த எதிரிகள் முன், தனி வீரர் இவர் போகிறாரே என்று, ஒளிந்து கண்ட ஊர்வாழ் மக்கள் உடல் உதறல் எடுத்தது.

அதோ மிலேச்ச வீரர்கள் புறங்காட்டி ஓடுகிறார்களே! காரணம் என்ன? சின்னப்பர்க்குப் பின்னும், இருபுறமும், பெரும் சேனை வெள்ளம் பெருகி வருவது கண்டனர். அதனால்தான், உயிர்க்கு அஞ்சி அப்படி ஓடுகின்றனர். தன்னை மறந்த தனி நிலையில், சின்னப்பர் உக்ர ஆவேசம் கொண்டு, கண்ணிற்கு எட்டிய தூரம், தொடர்ந்து அவர்களைத் துரத்தினர். சிதறி ஓடி மறைந்த அவர்களை, இன்னும் தேடுவது ஆகாது; திரும்புவது நலம் என்று அவர் அந்தக் காரணத்தில் ஒரு அறிவிப்பு.

உடனே குதிரையைத் திருப்பினர். பளபள என்று மின்னியது பழனிமலை. அவ்வொளியில், திரும்பு கோலத்தில், மாபெரும் சேனைகள் தோன்றி மறைந்தன. எம்பெருமான் திருவருள் இருந்தவாறு இவ்வாறோ என்று, விதிர் விதிர்த்து சின்னப்பர் வியந்தார். வியர்த்தது மேனி. ஆலயத்தை அடைந்தார். முத்தையா! நின்மேல் எனக்குப் பிதையா!

''தனித்துப் பரிமேல் தகவொடுசெல் கென்று
செனித்த படைசூழச் செய்தே—பனித்தவர்கள்
வாவிச் செலச்செய்தே வாழ்வித்த நின்னடியில்
தாவுகின்ற தென்னுளமே தான்''

என்று பாடி, எம்மான் திருமுன் இன்பக் கண்ணீரை இரைத்தார். அதன்பின் அருமையான தன் மாளிகையை அடைந்தார்.

ஊர் மக்கள், பின் விவரம் உணர்ந்தனர். குதூகலித்து, சின்னப்பரையே தெய்வமென்று கொண்டாடினர்.

நான் தனி மனிதன். மற்றொரு வகையில், பக்தர்களின் பாத சேகரன். பெரிதும் என்னை நீங்கள் போற்றுவது பிழை. பெருமான் தேரை நடத்தியது இப் பிள்ளைத் தமிழ்; இதுதான், வீம்பு கொண்டு வந்த மிலேச்சர்களை விரட்டியது. வேண்டுமேல், இதனை மனனம் செய்து, பரமன் திருமுன் பாடுங்கள்! என்று அதனை அவர்களிடம் அளித்தார்.

கூறைபோர்த் தேயிறைஞ்சும் குணதிலகர்க் குய்திதரு
சேறையான் தாள்செல்வம் சேரும் சிறப்புறுமோ

ஓடிய மிலேச்சர் அயர்ந்து உறங்கும் போது, அவர்கள் கனவில், சின்னப்பர் திருவுருவம், படபடத்து வந்து பயங்கர நகை செய்ததாம், அவரொடு வந்த பல்லாயிரவர், அவர்களை விரட்டி விரட்டியடித்தனராம். விழித்தனர். வியர்த்தது அவர்கள் உடல்.

விரிவாக விசாரணை நடத்தினர். சின்னப்பர் சிறந்த பக்தர் என்பதை அறிந்தனர். பலர் மூலம் அவரிடம் மன்னிப்பு வேண்டினர். தங்கள் பெயரால், கும்பினி வேலாயுதர் எனும் ஒரு மூர்த்தத்தையும் தோற்றுவித்தனர். ஆராதனைக் கென்று, வாரிப் பொருளை வழங்கினர்.

என் அன்பன், அவன் பிறவி அந்தகன்; சின்னப்பா! அடிவாரத்தில் என்னைச் சேவிக்க வேண்டும் என்று அலறுகிறன். உன் கையால் அவன் கண்ணைத் தொடு!

இப்படி ஒரு நாள் கனவு கண்டு விழித்த சின்னப்பர், ஓட்டம் பெருநடையாக ஓடினர். அந்தக அன்பரை அறிந்தார். கட்டித் தழுவினர், கண்ணைத் தடவினர். மலர்ந்தன கண்கள். வியந்து கூவிய அந்த அன்பரை, இது திருவருள் ரகசியம்! உம்மொடு எம்மொடு இருக்கட்டும் என்று, அவரொடு அளவளாவி ஆநந்தித்தார். பலநாள் பழனியானை வழிபட்டதன் பயனுக, அம்மான் அருள் நிழலில் ஆநந்தம் கொண்டது அவர் ஆன்மா!

இவர் பாடிய பிள்ளைத் தமிழை இன்று எவரும் ஓதி இன்புறுகின்றனர். இவ்வளவு நாட்களாக, இருந்தும் மறைந்திருந்த வரலாறுகளில் இதுவும் ஒன்று.

வாழ்க முருகன் அடியவர்!

ஆணும் பெண்ணும்.

[வா. ராமலிங்கம்]

உலகத்துள் நிலவும் உயிரினங்கள் எண்பத்து நான்கு நூறுயிரம் எனப்படும். இவை அனைத்திலும் ஆண் பெண் என்ற இன வேறுபாடு உண்டு. உடலுறுப்பின் அமைப்பிலும் ஊன்றி நோக்குமிடத்து ஆணுக்கு வன்மையும் பெண்ணுக்கு மென்மையும் இயல்பாகவே அமைந்திருப்பது தெளிவாம். எவ்வுயிரினும் மேலாய மனித இனத்

பாலூர் மதியிரவில் பண்ணவர்கள் ஏத்தவரும்
நாலூர்வாழ் தேவென்னை நண்ணுமின்பம் நண்ணுறுமோ

திலும் இவை காணலாம். இனி பகுத்தறிவு என்னும் தனிப் பண்புடைய மனித இனத்தில் ஆண் பெண் இரு திறத்தாருக்கும் அவ்வறிவு உண்டேனும் அதிலும் வன்மை மென்மை உண்டெனக் கொள்ளற்குற்ற காரணம் உண்டு.

ஆன்மா இருபாலார் உடலிலும் இயைவது முன்னை வினையினாலேயே யாம். நல்வினையினாலேயே ஆணாகவும் மெல்வினையினாலேயே பெண்ணாகவும் பொருந்துகின்றது. இதனை ஔவைப் பிராட்டியார்

"பேடு நீக்கிப் பிறத்தல் அரிது"

என்றார்.

இனி அறிவில் ஆண்மை என்பது ஆளும் தன்மையதாயும், பெண்மை என்பது ஈகையும் பேணலும் இசைந்த தன்மையாகவும் காணப்பெறும். எவ்வுயிரினும் ஓடி உழைத்து உணவு தேடித் தரும் தன்மை ஆணுக்கும், இனம் பெருக்கும் மகப்பேறு எய்தி, எய்திய இனம் உயிர்களைக் காத்துக் கவினுறத் தன்கால் கொண்டு இரைதேடி இயங்கும் வரை காக்கும் தன்மை பெண்ணுக்குமாக விலங்கு, புள், ஆகியவற்றிலும் விளங்குவதாகும்.

ஏற்ற மிக்குடைய மனித இனத்திலும் மகப்பேறு மாதராம் பெண்ணினத்துக்கே யாகவும், பெற்ற மகாரை உற்ற பருவம் வரை ஊட்டி வளர்த்து நீராட்டி நேர்மை செய்து பேணுவது பெண்பாலார்க்கே பெரிதும் உரிமை யாயிருப்பதும் கண்கூடு. பேணும் தன்மைக்குப் பொறுமை மிகவும் வேண்டப்படுவதாலும், அந்தப் பொறுமைத் தன்மைக்குத் தெரிந்தனவற்றையும் தெரியாதனவாக அறிந்தடங்கும் பண்பு அன்னார்க்கே உளதாதல் பற்றியும்:—

"பேதமை என்பது மாதர்க் கணிகலம்"

என்று இனிது ஓதப்பட்டது.

'பேதமை' என்ற சொல்லுக்கு 'அறிந்தடங்குதல்' என்பதே பொருளாகும். அறியாமை என்பது பொருளல்ல என்பதை,

---

தாய்க்கரையும் தாலென்னத் தக்கவர்க்குப் பாடுகடு
வாய்க்கரையா யுன்னருமை வாழ்த்துவதும் எங்ஙனமே!

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்"

என்ற வள்ளுவர் வாக்கால் தெளியலாம்.

இனி ஓடியாடி உழைத்து வாழ்க்கைக்குரியன ஈட்டுதல் ஆண் இனத்தின் தன்மை. கொண்டு வந்ததைப் பேணி நின்றுதவல் பெண் இனத்தின் பெருமிதம் என்பது விலங்கினத்துள்ளும் விளங்குவ என்பது. அது,

"மந்தி கடுவனுக் குண்பழநாடி மலைப்புறம்"

என்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாக்கினுல் காணக் கிடக்கின்றது. நிற்க,

எல்லா உலகுக்கும் உயிருமாய் இருக்கும் இறைவனே பெண்ணும் ஆணுமாய்ப் பேசுந் தன்மை; ஆணுந்தன்மை அரனும் (சிவன்) பெண்ணுந் தன்மை பிரியாவுடையாள் (சக்தி) என்பது கூர்ந்துணர்ந்து கருதற்பாலதாம். இதற்கு மாறுக ஆளுந்தன்மை பெண்ணுக்கும் பேணுந்தன்மை ஆணுக்கும் மாற்றியமைத்தல், ஏற்று நடத்தல், பெண் இனம் பிறங்கு பயிற்சியால் முற்படினும், ஆண் இனம் அவர் தம்மின் பேணும் நிலையிலோ, பெறும் நிலையிலோ நிற்க இயலாது என்பது இனிது உணரப்படும். இன்னும் பேணிக் காக்கும் தன்மை பெண்ணுக்கேயாம் என்பதை,

"தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற வள்ளுவர் வாக்கு இனிது புலப்படுத்தும். பேணுதலில், தன்னைப் பேணுதல் பிறரைப் பேணுதல் எனப் பாகுபடுத்தி இவ்விரண்டு நிலைக்கும் ஏற்றவர்கள் பெண்பாலரே எனத் திண்ணமாகத் தெரிந்துரைத்தார் தேவர். தன்னையும் பிறரையும் உணவு மருந்து ஊட்டுதல் நீராட்டுதல் துயில்வித்தல் என்பன செய்து காத்தல் பொதுத் தன்மையில் கவனிக்கப் பெறுவதாம்.

தன்னைக் காத்தல் என்பதில் பொதுவாக உணவு, மருந்து முதலியன தனக்குத்தானே தேவை யறிந்து உத

பெரும்பூளை யிப்பிறவி பேரருட்காற் றுலென்னும்
இரும்பூளை எம்மானே! இதுபோதும் அருடியரோ

யிக் கொள்வதோடு சிறப்பாக நிறை காத்தல் என்ற பண்பில் நிகரற்று விளங்குவதே உத்தமப் பெண்களுக்கமைந்த உயரிய தன்மையாம். இத்தன்மையில் ஆடவர் பெண்டிற்குப் பிற்பட்டவரே என்னலாம்.

"சிறை காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை"

என்ற குறளால் வள்ளுவர் இதனைத் தெள்ளத் தெளியக் கூறியருளினர். இன்னும்

"பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையில் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து"

என்பதாலும், நிறை காத்தலுக்கு முதற் காரணமாகிய "நாணம்" உடைய பெண் பெருமையுடையதெனத் தெளிய வைத்தனர். இந்த நிறை காத்தல் தன்மை மனித இனத்தில் மட்டுமன்றி விலங்கினத்திலும் இலங்குவதென்பது ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய சீகாழிப் பதிகப் பாடலால் காணலாம்.

"மாற்றுக்களி றடைந்தாயென்று மதவேழம் கையெடுத்து
மூற்றிக்கனலுமிழ்ந்துமதம் பொழிந்துமுகம் சுழிய
தூற்றத்தரிக் கில்லேனென்று சொல்லியய லறியத்
தேற்றிச்சென்று பிடிசூழலுஞ் சீபர்ப்பத மலையே"

எனவே தன்னைக் காத்து நிலை பிரியாது நிற்றலே ஏற்றமாம். இது குறித்தே ஔவையாரும் "நிலையில் பிரியேல்" எனவும், வள்ளுவர்

நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

எனவும் கூறியருளினர்.

தன்னைப் பேணும் தன்மையோடு பிறரையும் பொறுமையோடு பேணுங் கடமை யுடைமை பற்றியே, இன்னும் மருத்துவ விடுதிகளில் நோயினரான ஆண் பெண் இரு பாலாருக்கும் காலமறிந்து கவனத்துடன் உணவு, மருந்து

பெருவிரதம் கொண்ட பெரியோர்க் கருள்கின்ற
திருஅரதைப் பெரும்பாழித் தேவேநீ வாழியரோ

கொடுத்து உதவ, "நர்ஸ்"களாகப் பெண்பாலரே அமைந் திருப்பது ஊன்றி உணரத் தக்கதாம், ஆண்கள் அப் பணிக்கு அமைக்கப் பெறுமையும் பெண்களே அதற்குரிய பண்புடையவர் என்பதை இனிது விளக்கும்.

இவை உலகநெறி பற்றியவை.

இனி மேன்மைத் தெய்வ நெறியிற் புகும்போது, ஆண் பெண் இரு பாலாரும் மனத்திட்பம் என்ற பண்பிலே இறைவனை நோக்கி ஒருமை மனம் பெற்று உலையாது நின்றால், உற்ற பலனைத் தெற்றென அடைவர் என்பது பெரிய புராணத்தால் தெளிவாம்.

ஏற்றத் தாழ்வு இல்லாத பெற்றி பாற்றிருமேனிப் பரமனருள் நோக்கிப் பிற பற்றை முற்றவிட்ட நிலையிலேயே இசைவதாகும்.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர். சே. த. ராமலிங்கம் பிள்ளை. B. A. B. T.)

திருக்காளத்தி :

இத்தலம் ஸ்ரீகாளஹஸ்தி எனவும் வழங்கப் பெறுவது. ஸ்ரீ—(சிலந்தியும்) + காளம் (பாம்பும்) + ஹஸ்தி (யானையும்) பூசித்த தலமாதலின் இப் பெயர் பெற்றது.

சிலந்தி வரலாறு :

முன்னொருகால் தாமரைத் தவிசில் ஏறியிருந்து விசுவ கன்மன் எனும் நான்முகன் படைத்தல் தொழிலை நடத்திக் கொண்டிருந்தான். அப்போது அவனது கண்ணினின்று ஒரு மகன் தோன்றினான். அவனுக்கு மாதவவூறன் எனப் பெயர். அவன் கருவிலேயே கலைகளெல்லாம் கரை கண்டவன்போற் காணப்பட்டான். அவன் தனது தந்தையாகிய கமலத்தோன் செய்யும் சிருட்டி முறையைக் கண்டு

தவன அசுரகுரு தாளேத்தத் தண்ணளிசெய்
அவளிவண நல்லூர் அரசேகண் பாராயோ

'இதனை நானும் செய்வேன்' என்று எண்ணித் தருக்கினான். தந்தையையும் மதியாமலேயே மிகமிக வேகமாய் உலகங்கள் பலவற்றைப் படைக்கலுற்றான். மகனது அகந்தை கண்டு மலரவன் மனங் கொதித்தான். அதனால் மாதவவூறனது அகந்தையை அகற்ற எண்ணிச் "சிவனார் எனக்குப் பணித்த சிருட்டித் தொழிலின் சிறப்பைச் சிறிதும் எண்ணினாயில்லை! சிறு பிள்ளை விளையாட்டாய்த் தந்தையான என்னையும் அவமதிக்க இத் தொழில் இயற்றினை! ஆதலின் சிறிய நூலினை இழைக்கின்ற சிலந்தியதாகுக" எனச் சபித்தான். உடனே மகனது தருக்கு மாய்ந்தொழிந்தது. அறிவு பிறந்தது. "ஐயகோ! அறியாமல் அடியேன் செய்த சிறு பிழைக்குச் சினங்கொண்டு விட்டீர்! எளியேனை மன்னித்து உய்யும் உபாயம் உரைக்க வேண்டும்" என்று கண்ணீர் பெருக்கிக் கதறி வேண்டினான். அயனும் கோபம் ஆறியவனாய், "மகனே! வருந்தாதே. விமலன் எழுந்தருளியுள்ள "வேழவனம்", "வில்வவனம்" என்றெல்லாம் பெயர் பெற்ற திருக்காளத்தியை அடைந்து தேவதேவனைத் தென் கயிலாயனை ஆவலோடு அருச்சித்து அருங்கதி மேவுவாய்" என்று கூறி விடுத்தான்.

அப்படியே மாதவவூறனும் சிலந்தியாகித் திருக்காளத்தி வந்து சேர்ந்தனன். அத் தலத்தைச் சார்ந்ததும் முன்னுணர்வு தோன்றியது. உடனே பொன்னின் ஒளியும் ஒலியும் கொண்டோடும் பொன்முகரி ஆற்றில் மூழ்கி இணையில் திருக்கயிலாயத் திறையை வழிபட எண்ணியது. இறைவனாகிய தென் கயிலைத் தெய்வத்துக்கு ஆலயமில்லா திருத்தலக் கண்டது.

"மாமதிலும் கோபுரமும் மண்டபமும் மாளிகையும்
தோமில்கருப் பெயர்த்தலமும் சூளிகையு முதலாய
காமர்திருக் கோயில்எல்லாம் களிச்சுரும்பு விளையாடும்
தேமலர்த்தா ரகன்மார்ப! சென்றதாற் சிறுசிலந்தி"

பரிதி வழிபட்டு ஞானப் பயனடைந்த
பரிதி நியமம்யான் பற்றஅருள் எம்பரனே

இவ்வாறு ஒரு தினை யளவாயினும் சும்மா இருந்து இளைப்பாறவும் பொழுதில்லாமல் முன்போலவே நூல் நூற்று வருகிற நாளில், அச் சிலந்தியின் அன்பினை உலகம் அறிய வேண்டுமென்று ஐயன் திருவுளம்பற்றி முன்னெரியும் திருவிளக்கை முழங்கி மேல் எழச் செய்தான். விளக்குச் சுடர்பட்டு சிலந்தியின் திருக்கோயில் தீப்பற்றி எரிந்து விட்டது. இதனைச் சிலந்தி கண்டதும், "ஐயோ! இத்திருக்கோவில் அழல் பற்றி அழிந்ததுவே! இது முன்னாளில் யான் செய்த முடிவில் தீவினைச் செயலோ? என் ஆவிக்கொரு துணையாம் எம்பிரான் தனக்கு இந்தப் புன்னூலின் திருக்கோயில் பொருந்துவதில்லையோ? ஆயிர நாள் உடல் வருந்தி அந்தி பகல் துயிலாமல் வாயினால் வயிற்றிருந்து வளர் நூல்கள் பல இழைத்தேன்! தீயினால் அழிவதற்கோ திருக்கோயில் செய்தேன் யான்? தாய் அனையான் திருவருளும் தமியேன்பால் இவ்வளவோ?" என்று பலப்பல கூறி வருந்தியது. இத் திருக்கோயில் அழிந்தது கண்டு இன்னும் உயிர் தரித்திருப்பது தகுதியாகுமோ எனச் சிந்தித்து எரிகின்ற விளக்கில் விழுந்து உயிர்விட எழுந்தது. அப்போது அடியார் துயரப்பட ஆற்றாத அரனார் வெளிப்பட்டார். அவரது திருக்கரத்தால், சிலந்தியை விளக்கில் விழுந்திறவாமல் விலக்கி, "நம்மிடத்தில் அளவற்ற அன்பு கொண்டுள்ள அருமைச் சிலந்தியே! உன் திருத்தொண்டின் சிறப்பும் திடங்கொண்ட அன்பின் திறமுங் கண்டு அக மகிழ்ந்தோம். உன் விருப்பம் யாது?" என்றனர். சிலந்தியும் நாதனார் காட்சியால் ஞானம் பெற்று, "அண்ணலே! நின் பொன்னார் சேவடிக்கீழ் எனை வைப்பாய்" என வேண்டியது. அப்படியே சிலந்தியை மகாதேவரும் மாதவர்க்கும் கிடையாத மலரடியில் மாறுதென்றும் மன்னி வாழ்ந்திருக்கச் செய்தார். அப் பெருமான் குறையாத அருள் பெருமை யாவரே கூறவல்லார்?

பூவன்வழி பட்டுய்யும் பூவனூர்ப் பேர்சார்
தேவனூர் வந்தடியேன் தேர்வருளில் நேர்வேனே

பாம்பு வழிபட்டது :

வெள்ளியங்கிரியில் ஓர் நாள் விளங்கிய அரியாதனத்தில் அமர்ந்தருளி அடியவர்க்கெல்லாம் திருவோலக்கத் திருக்காட்சி வழங்கத் திருவுளம் பற்றினர் சிவபிரான். அப்போது புலித்தோலை அரைக்கசைத்தார்; சடையை முறுக்கிக் கட்டினார்; பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறு பூசினார். அழகிய கண்டிகைக் கலன்களும், சிரமாலை, கொன்றைத் தலைமாலை, இளம்பிறை, பாயுங் கங்கை முதலியன புனைந்தனர். பின் தனக்கு மிகப் பிடித்தமான அரவணிகளை எடுத்தணியலாயினார். அவற்றில் காளன் என்றொரு பாம்பு காணப்படவில்லை. அதனைக் கருதும் பொழுதில் அது காமநோய் கொண்டு சேடன் முதலிய பாம்புகள் குடியிருக்கும் பாதலஞ் சேர்ந்து பொதுமகளொருத்தியிடம் சென்று இருந்தது என்றறிந்தனர். ஆயினும் சடைமுடியார் சற்றுங் கோபிக்காமல் அப் பாம்பை நோக்கி, "காம நோயால் சிந்தனை கலங்கிச் சென்றாய். காள! நீ கயாரண்யம் என்னும் காளத்தியை அடைந்து பாம்பாய் மண்மிசைப் பல நாள் வாழ்க. பின் தென் கயிலாயஞ் சேர்ந்து பாம்புருவாய்ச் சிவபூசை செய்வாய். அந்நாளில் அங்கு அன்புடன் ஒரு யானையும் பூசிக்க வரும். அதற்கும் உனக்கும் பகை நேரும். நீ அதனைக் கொல்ல முயன்று, முன்னே அதுவும் பின்னே நீயும் இறந்து பின் முத்தி பெறுவீர்கள்" என்றார்.

அவ்வாறே காளன் பாம்பாகி வந்து காளத்தி நாதனை வணங்கி வழிபட்டு, அங்குப் பூசிக்கும் யானையால் இறந்து முத்தி எய்தினன்.

அத்தி வழிபாடு :

முன்னொரு சமயம் அத்தி என்னும் பூதகணத் தலைவன் சிவதரிசனம் செய்வதற்குத் திருக்கயிலாயம் சென்றான். அவன் இறைவனார் சன்னிதி யடைந்ததும் அங்

வேதாள மாகி விரிசலடை பொய்வாழ்வு
பாதாள ஈச்சுரனார் பார்வையினல் உய்யாதோ

கிருந்த வாயிற் காவலர் அக் கணநாதனைப் பார்த்து, "அரனார் அம்மையுடன் தனித்திருப்பதால், இப்போது அவரைத் தரிசிக்க முடியாது" எனக் கூறித் தடுத்தனர். ஆனால் ஆண்டவனைக் காணும் அன்பு மேலிட்ட அத்தி விரைவாய் உள்ளே புகுந்து பரமன் இருந்த இருக்கையை எய்தினான். இவனது துணிவான செயலைக் கண்ட மலைமகள் கோபித்து, "அத்தி! நீ மதங்கொண்டலையும் அத்தி (யானை) யாகுக" எனச் சபித்தனர். அது கேட்ட அத்தி மிகவும் வருந்தி அம்மையப்பரை அன்புடன் வழிபட்டுப் "பேயேன், அறியாது செய்த பிழை பொறுத்தருள்வீராக" எனக் கெஞ்சினான். தேவதேவர் திருவுள மிரங்கி, "அன்ப! அஞ்சாதே! நீ கயாரணியம் என்னும் காளத்தியை அடைந்து யானை உருவுடன் நம்மை வழிபடுவாய். அதன்பின் உனக்குச் சிவகதி வழங்குவோம்" என்றனர்.

சிவனார் திருமார்பு அணியாயிருந்த காளன் என்ற பாம்பு செஞ்சடையண்ணலார் சாபப்படிக் கயாரணியத்தினை யுற்றுப் பரமனை நாடோறும் பணிந்து வந்தது. சில நாட்களுக்குப்பின் அங்கு அத்தி என்ற கணநாதன் யானை உருவில் வந்து வில்வாரண்ய முற்று விமலனை வழிபட்டான். யானை ஒவ்வோர் நாளும் பொன்முகரி யாற்றில் நீராடித் துதிக்கையில் நீர் முகந்து வந்து பெருமானுக்கு அபிடேகித்து வில்வத் தளிர்களைச் சூட்டி வணங்கிப் போகும். அடுத்த நாள் அதிகாலையில் பாம்பு வந்து அத் தளிர்களைக் கண்டு, "அந்தோ! அந்தோ! விமலர் திருமுடிக்கு மேலான மாணிக்க மணிகளை அணிவிக்காமல், பச்சிலைகளையா பரப்புவது!" என்று வருந்தி அவற்றினை அகற்றி விலையுயர்ந்த மாணிக்கக் கற்களால் ஐயனை அழகு செய்து வணங்கிப் போகும். மறுநாள் யானை வரும். அது "ஐயோ! யான் சூட்டிய நறுமலரும் பைந்தளிரும் நாயகன் முடியினின்று அகற்றியதோடு கற்களையிட்டக் கயவன் யாவன்!" எனக் கடிந்து அவற்றை அப்புறப்படுத்தி வழக்கம்போல நீராட்டி

வான்கலந்து ஞானியர்கள் வாழ்த்தும் திருப்பதியாம்
வான்களர்வாழ் தெய்வமுதல் வந்துமணம் முந்துறுமே

வில்வமிட்டு வழிபட்டுப் போகும். இங்ஙனம் சில நாட்கள் செல்ல, ஒரு நாள் பசுந்தளிரால் வழிபடும் பகைவனைக் கொல்வேன் என்று பாம்பு பூங்கொத்தில் மறைந்து காத்திருந்தது. அருவிலை மணிகளை அணியும் அரவினைக் கொல்ல ஆனையும் எண்ணிற்று. அன்று தானிட்ட பூவும் தளிரும் அகற்றாமல் இருந்தது கண்ட ஆனை அகமகிழ்ந்து பெருமான் திருமுடி மலரை அகற்றி அபிடேகிக்க முற்பட்டது. இதுதான் சமயம் என்றுன்னிய பாம்பு யானையின் துதிக்கையிற் புகுந்து மத்தகம் வரையிலும் சென்று குடையலாயிற்று. வலி தாங்க மாட்டாமல் யானையும் துதிக்கையை நிலத்தில் ஓங்கி அறைந்தது. பாம்புடன் யானையுமிறந்தன. செஞ்சடை யண்ணல் தேவியாரோடும் திறல் விடையேறிக் காட்சி தந்து அவ்விரண்டிற்கும் ஒப்பற்ற சிவ சாரூப மளித்துக் கயிலைக்குக் கொண்டு சென்றார். அன்று முதல் அத்தலத்திற்கு சீகாளத்தி என்ற திருநாமம் வழங்கலாயிற்று.

"சீயொடு காளம்,அத்தி எனும்பெயர்ச் சிலந்திபாம்பு
மாயிருங்களிறு இம்மூன்றும் பரகதிபெற்ற ஆற்றால்
ஆயது சீகாளத்தி எனும்பெயர் அன்றுதொட்டே"

வழிபட்டோர்

இங்கு வழிபட்டுப் பேறடைந்தவர்கள் பலராவர். அவர்களுள் நாளாறில் முத்தி பெற்ற கண்ணப்ப நாயனார் குறிக்கத் தக்கவர்.

திண்ணனார்

பொத்தப்பி நாட்டில் உடுப்பூரை ஆண்ட நாகராஜனுக்கும் தத்தை அம்மைக்கும் குழிஞ்சிக் குமரன் அருளால் அவதரித்தார். காளைப் பருவம் எய்திக் கன்னிவேட்டைக்குச் (முதல் வேட்டை - Maiden hunt) செல்லும் போது வலை கிழித்தோடிய வராகத்தைத் தொடர்ந்து

சிற்றேமம் நாடிச் சிதைந்துமனம் வாடாமல்
சிற்றேமச் சூரியன்எம் சிந்தை வந்து தங்காதோ

காளத்தி வரையை அடைந்தார். நாணன் என்ற வேடன் துணை கொண்டு மாகமார் திருக்காளத்தி மலைமேல் ஏற லானார். முன்பு செய்தவத்தின் வன்மையால் பொருவில் அன்புருவமானார். பேணு தத்துவங்க ளென்னும் பெருகு சோபான மேறி ஆணையாம் சிவத்தைக் கண்டு சிக்கெனப் பிடித்துப் பேரன்பு காட்டினார். சிவனார் சென்னியில் வழக் கமாய் வழிபடும் சிவகோசரியா ரிட்ட பூவொடு தளிரைக் காலில் வளைந்த பொன் செருப்பால் மாற்றி, வாய் கலசத்து நிறைத்து விளைத்த அன்பு நீராட்டிக் கொந்தலர் பள்ளித் தாமம் (பூ) தலையினின்று எடுத்துச் சாத்தினார். கோலி னில் கோத்துக் காய்ச்சிக் கொழுந்தசையைப் பதமாய் வேக வைத்து, நாவில் பழகிய சுவைமுன் காண வாயிலிட்டு அதுக்கிச் சாலவும் இனியனவாகக் கொணர்ந்து வைத்து ஊட்டினார். சிவனாரும் உண்டு களித்து அன்பின் திறத்தை அறிய வைத்தனர். இதனை விரும்பாத சிவகோசரியார் கனவிலும் சென்று திண்ணனார் திருத்தொண்டைத் தெரி வித்தார். மறுநாளும் வந்து ஓர்பால் மறைந்திருக்கப் பணித் தார். அடுத்த நாள் ஐயனார் தம் திருக்கண்ணில் புண்தரு குருதி காட்டி அறவழி நிற்கும் காளத்தி வேடரைக் கண் ணிடந்து அப்புமாறு செய்தார். குருதி நின்றதால் களிப் பால் குதித்த வேட்டுவச் செம்மல் காணுமாறு மற்றைக் கண்ணும் குருதி கொப்புளிக்க நின்றார். அஞ்சா நெஞ் சுடன் நம் வேட்டுவப் பெருந்தகையார், "இன்னும் உண் டொரு கண்" அதனையும் பறிக்க முயன்றனர். தரித்திலர் தேவதேவர். சிவலிங்கத்திடைத் தோன்றிய செழுமலர்க் கைகளால் வேட்டுவர் கரத்தைப் பிடித்தும், "நில்லு கண் ணப்ப! நில்லு கண்ணப்ப!" என்று அமுத வாக்கால் அறி வித்தும் தடுத்து, தமது வலப்பால் மன்னும் சாமீப முத்தி அருளினர். விரிவு சீகாளத்தி புராணம், திருத்தொண்டர் புராணம், சைவத் திருமுறைகள், திருப்புகழ், திருவருட்பா முதலிய அருள் நூல்களிற் காணலாம்.

கற்றவர்கள் வாழ்வுபெறு கண்ணுதலார் மன்றுவளர்
உற்ற உசாத் தானம் ஒருநாளும் காணேனே

"வேயனைய தோளுமையோர் பாகமதுவாக விடையேறி சடை
[மேல்
தூயமதி சூடி சுடுகாடின் நடமாடி மலைதன்னை வினவில்
வாய்கலசமாக வழிபாடுசெயும் வேடன் மலராகு நயனம்
காய்கணையினு லிடந் தீசனடி கூடு காளத்தி மலையே"
(ஆளுடையபிள்ளை)

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப்பணித் தென்னை வாவென்ற வான் கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய்க் கோத்தும்பீ !
(ஆளுடைய அடிகள்),

" பொக்கணத்து நீற்றையிட் டொருத்தனுக்கு
புத்திமெத்த காட்டு—புனவேடன்
பச்சிலைக்கும் வாய்க்குள் எச்சிலுக்கும் விக்கு
பைச்சிலைக்கும் ஆட்கொள்—அரன்வாழ்வே"
(புலியூர் திருப்புகழ்)

[திருநீற்றுப் பையிலுள்ள விபூதி பூசிய ஒரு மறையவருக்கு (சிவகோசரியார்க்கு) (அன்பின் சிறப்பை) உண்மையை நன்கு விளங்கச் செய்த கானவேடராகிய திண்ணனார் கொடுத்த பச்சிலையிட்டவழிபாட்டுக்கும், வாயினின்று வந்த எச்சில் நீர் முழுக்கிற்கும், தமக்கு (அல்லும் பகலும் உறங்காமல் காவல் செய்யவென்று) கட்டிய வில்லுக்கும் அன்பு கொண்டு அவரை ஆட்கொண்ட அரனார் வாழ்வே.]

" கூசாதுவேடன் உமிழ்தருநீராடி ஊன்உணெனுமுறை
கூறுமனியு மவன்நுகர் தருசேடம்
கோதாமெனுமமுதுசெய் வேதாகமாதி முதல்தரு
கோலோகநாத! குறமகள்—பெருமானே"
(பொது—திருப்புகழ்)

[வேடன் உமிழும் எச்சில் நீராயிற்றே என்று கூசாமல் முழுகி, அவன் வாயிலிட்ட எச்சில், சேடம் என்று கூறுமதும் திருவமுது செய்த வேதாகமாதிகள் தந்த விம

அல்லல்பல நீக்கியருள் ஆண்மை அறிவுதவும்
மல்லல்இடும் பாவனத்தில் வந்துமகிழ் கொள்ளேனே

லர் அருளிய சிறந்த உலகநாத! வள்ளி மணவாளப் பெருமானே!]

"மார்கா வர்தித பாதுகா பசுபதே! ரங்கஸ்ய கூர்ச்சாயதே!
கண்டுஷாம் புநிசேஷனம் புரரிபோ! திவ்யாபிஷேகாயதே!
கிஞ்சித் பக்ஷித மாம்ஸ ஸேஷ கபலம் நவ்யோப ஹாராயதே!
பக்தி! கிம்நகரோதி! அஹோ! வனசரோ பக்தாவதம்ஸாயதே"

[பசுபதி! வழி நடந்து தேய்ந்த பாதுகை உமது திரு முடிக்குக் கூர்ச்சமாயது! புராரியே! வாயினின்று உமிழ்ந்த எச்சல் நீர் நல்ல அபிடேக மாயிற்றே! கொஞ்சம் தான் உண்ட இறைச்சியின் எச்சல் உணவு உமக்குச் சிறந்த நிவே தனமாயது! வேடன் ஆயினும் பக்தியான். ஆதலின், வியப்பு! பக்தி எதுதான் செய்யாது.]

(சிவானந்தலஹரி)

[தொடரும்]

<u>அநுபூதி விளக்கம்—6</u>

தனி யானை

(கி. வா. ஜகந்நாதன்)

முருகப் பெருமானிடம் பாடும் பணியை வேண்டினார் அருணகிரியார். ஆடும் பரியையும் வேலையும் அணி சேவலை யும் பாட வேண்டும் என்று விரும்பினார். கந்தர் அநுபூதி யின் முதற் பாட்டின் முற்பகுதி அது.

"ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என்பது அப்பகுதி. பிற்பகுதி முருகனை விளிப்பது. அங்கே முருகனுடைய பெருமையைச் சொல்ல வேண்டும். கந்தர் அநுபூதி முழுவதுமே அவன் பெருமையைச் சொல் வதுதானே? இங்கே அவர் முருகனுடைய பல்வகைப் பெரு மையில் எதை நினைக்கிறார் தெரியுமா?

காணும் கடிக்குளத்துக் காணவுள கண்ணுதல்நின்
மாணும் திருவடியை என்னுணர்வில் வையாயே

திருக்கோயில்களில் வாசலில் ஒரு கணபதி இருப்பார். அவரைத் துவார கணபதி என்று சொல்வார்கள். கோயிலுக்குள் புகுந்தால் அங்கும் விநாயகர் எழுந்தருளியிருப்பார். அவருக்கும் கும்பிடு போட வேணடும். கந்தரனுபூதியாகிய சொற்கோயிலின் திருவாசலில் பஞ்சக்கர ஆனையை அருணகிரியார் காட்டினார். இப்போது கோயிலுக்குள்ளே புகுந்து விட்டும் ஆடும் பரியாகிய வாகனத்தையும் அதனருகே நட்டிருக்கும் வேலையும் மேலே தோன்றும் துவசத்தையும் தரிசிக்கச் செய்தார். இனி உள்ளே போகிறோம். அங்கேயும் விநாயகர் இருக்கிறார். அவரைக் காட்டுகிறார். 'அவரைக் காட்டி அவருக்குச் சகோதரன் நம்முடைய நாதனாகிய முருகன்' என்று காட்டுவதுபோல அமைகிறது பாட்டு. ''விநாயகருடைய சகோதரனே!'' என்று முருகனை விளித்துப் பாடும் பாட்டாக இருந்தாலும் அதைத் தெரிந்து கொண்டு தெளிவு பெறுகிறவர்கள் நாமே அல்லவா?

விநாயகருடைய சகோதரன் என்று முருகனைச் சொல்லும் வாயிலாக விநாயகருடைய வீரத்தை எடுத்துச் சொல்கிறார். விநாயகரை முன்பு பஞ்சக்கர யானையாகச் சொன்னவர் இப்போது சாடும் தனி யானையாகச் சொல்கிறார். அங்கே விநாயகர் கொடையாளராகக் காட்சியளிக்கிறார். இங்கே தனி வீரராகக் காட்சி அளிக்கிறார்.

வீரச் செயல் புரிவதிலும் ஒரு தர்மம் உண்டு. பகைவன் படை எடுக்காமல் இருக்கும்போதும் அஞ்சி ஓடும் போதும் அவனை ஒன்றும் செய்யக்கூடாது. அவன் வில் எடுத்துப் போர் செய்தால் அவனோடு வில் எடுத்தே போர் செய்ய வேண்டும்.

தேவர்களுக்கும் நல்லவர்களுக்கும் தீங்கு செய்வதில் இன்பம் கண்டு வந்தான் ஓர் அரசன். அவனுக்கு யானை முகம். அதனால் கஜமுகாசுரன் என்று பெயர். அவனை விநாயகர் சங்காரம் செய்து உலகத்துக்கு நன்மை உண்டாக்கினார். யானை முகம் கொண்டவனோடு தாமும் யானை முகமுடையவராக நின்று போர் புரிந்தார். அதுதான் யுத்த தர்மம்.

வண்டலைக்கும் தண்டலைநீள் நெறியதனில் வந்தே
கொண்டலைக்கும் பிறவிக் கோடையது தீரேனோ

"எங்கே நல்லவர்கள் இருக்கிறார்கள்?" என்று தேடிக் கொண்டே இருந்தான் அந்த அசுரன். அவர்களுக்குத் தொல்லை கொடுக்கத்தான் அப்படித் தேடினான். கடவுளும் தேடுகிறார். அவர்களுக்கு நன்மை செய்யத் தேடுகிறார். அந்த அசுரனை விநாயகர் எப்படிச் சங்காரம் செய்தார்? அவன் இருக்குமிடத்திலே அமுக்கிக் கொன்றிருக்கலாம். அவன் நடக்கும்போதே அவனைக் கீழே வீழ்த்தியிருக்க லாம். அது தர்மம் அன்று. அவன் தன் பலத்தை நம்பிக் கொண்டிருந்தான். 'அந்தப் பலம் முழுவதையும் பயன் படுத்திப் பார்க்கட்டும்; அப்போதாவது புத்தி வருகிறதா?' என்ற எண்ணத்தால் போரிலே சந்தித்தார் விநாயகர். செரு விளைந்தது. மூட்டைப் பூச்சியை நசுக்கக் குண்டாந் தடி வேண்டியதில்லை; எலிக் குஞ்சைக் கொல்ல யுத்தகளம் வேண்டாம். ஆனாலும் கணபதி அப்படி நினைக்கவில்லை. 'தன் பலத்தின் முழுமையையும் அவன் காட்டிப் போர் செய்யட்டும்; இடையிலே தளர்ச்சி வரும்போது தன் பேதைமையை உணரட்டும்' என்ற அருளுள்ளத்தால் போரை மூளச் செய்தார். ஆனைமுக அசுரனுக்கு முன்னால் தானும் ஆனைமுகத் தெய்வமாக நின்றார். இரண்டு பேருக் கும் ஆனைமுகம் இருந்தாலும் எத்தனை வேறுபாடு. விநாயக ராகிய ஆனை தனி ஆனை; ஒப்பற்ற ஆனை; அதனுடைய இயல்பே தனி.

நாம் காணும் ஆனையும் விநாயகராகிய ஆனையும் ஒன் றாகுமா? இந்த ஆனைக்குப் பிறரைத் துன்புறுத்தும் மதம் பொழியும். ஆனைமுகப் பெருமானுக்கோ அடியாருக்கு இன்பமளிக்கும் அருளே மதமாகப் பொழியும். இந்த ஆனை பாசத்தாற் கட்டுண்டு அங்குசத்துக்கு அடங்கும். வாரண முகப்பிரானே பாசத்தையும் அங்குசத்தையும் தம் கையிற் கொண்டிருக்கிறான்.

இத்தகைய விநாயகர் 'தேடும் கயமாமுகனைச் செருவில் சாடினார்.'

ஆனை என்பது அகங்காரத்தின் வடிவம். "ஆங்கார மென்னுமத யானை" என்பர் தாயுமானவர். ஆணவமுள்ள

புன்கோட்டி போக்கிப் புலமைமதி மிக்கேற்றும்
தென்கோட்டூர்த்தேவா நின் திருவிழையச்செய்வாயோ

வனுக்குப் பிறரைக் கண்டால் இழிவாகத் தோன்றும். எல்லோருக்கும் தானே தலைவன் என்று தோன்றும். ஆணவத்தின் உருவமே கயமுகாசுரன். ஞான சொரூபம் விநாயகர். "நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை" என்று திருமூலர் பாடுவார். ஆணவத்தை ஞானந்தான் அழிக்க முடியும். ஆணவ வடிவான கயமுகாசுரனை ஞானமே வடிவான கணபதி சாடினுர். புராணக் கதையின் உள்ளுறை இது.

இத்தகைய ஞான யானையின் சகோதரன், உடன் பிறந்தான் முருகன். 'தேடும் கயமுகாசுரனைப் போரிலே சாடிய ஞான மூர்த்தியாகிய விநாயகருக்குச் சகோதரனே!' என்று விளிக்கிருர் அருணகிரியார். குடும்பமே ஞானக் குடும்பம். முன்னவன் ஞான சொரூபி யென்ருல், அவன் தம்பியும் அப்படித்தானே இருக்க வேண்டும்? ஞான பண்டித சாமி என்று முருகனைப் போற்றுகிறவர் அருணகிரியார்.

'நல்லவர் எங்கே உள்ளார் என்று தேடி அவர்களுக்குத் துன்பத்தைச் செய்யும் ஆணவ வடிவமான கயமுகாசுரனை, நினைந்த அளவிலே அழிக்கும் ஆற்றல் தமக்கு இருந்தாலும் பரம கருணையினுல் அவனுக்குச் சமமாக நின்று போர் செயப் புகுந்து, அந்தப் போரில் அழித்த ஞான உருவினரும் தமக்கு ஒப்பற்றவரும் யானை வடிவினருமாகிய விநாயகருடைய சகோதரனுகிய ஞான பண்டிதனே, பிரணவ சொரூபமாக நின்று ஆடும் உன் மயில் வாகனத்தையும், தனக்கு உவமையில்லாத வேற் படையையும், உன் சந்நிதியை அலங்கரிக்கும் சேவற் கொடியையும் அவற்றின் பெயரைச் சொல்லிப் பாடும் கைங்கரியத்தையே என் வாழ்க்கைப் பணியாகும்படி திருவருள் பாலிக்க வேண்டும்' என்பது அருணகிரியார் வேண்டுகோள்.

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்;
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே!

[செரு - போர். சாடும் - அழிக்கும். தனி - ஒப்பற்ற.]

மருவாய் மலராகி அம்மலர்தோய் வண்டாய்தின்
திருவாய்வெண் துறையேறித் தெளியுமதி வாராதோ

ஸ்ரீ தியாகையரும் திருப்புகழ் வள்ளலும்

(V. R. G.)

நம் தமிழ் நாட்டின் புகழ் எங்கும் பரவச் செய்த பெரியோர்களில் தியாகையரும், அருணகிரிநாதரும் முக்கியமானவர்கள். அவர்கள் ஆண்டவனைத் துதித்துப் பாடிய பாஷைகளும், இருவரின் இஷ்ட தெய்வங்களும் வெவ்வேறாயினும், அவர்கள் நோக்கமும், செயலும், வாழ்க்கையும் ஒன்றாகவே இருந்திருக்கின்றன. சிந்தனை செய்து பார்க்கப் பார்க்க இன்னும் அதிக ஒற்றுமையே காணப்பெறும். அவைகள் யாதென ஆராய்வோம்.

இருவரும் பக்தி மார்க்கத்தாலேயே கடவுளின் கருணைக்குப் பாத்திரமாகி, ஆண்டவனை நேரில் தெரிசித்து நித்யானந்தமாகிய முக்தி நிலையை அடைந்தனர். அவர்கள் பாடல்களில் பக்தி வெள்ளம் நிறைந்து ததும்பும். படிப்போர், கேட்போர் மனதை உருக்கிப் பரவசமாக்கும்.

சிறிய குழந்தைகள்கூட கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான சிறு பாடல்கள் முதல், பெரிய வித்வான்களும் கவனத்துடன் பாட வேண்டிய அரிய பெரும் பாடல்கள்வரை, இருவரும் இயற்றியிருக்கிறார்கள்.

இஷ்ட தெய்வமாக ஒரு தெய்வத்தை வழிபடினும், மற்ற தெய்வங்களையும் சமமாக பாவித்துப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளனர். பல க்ஷேத்திரங்களுக்கும் சென்று தெரிசித்துக் கீர்த்தனைகள் இயற்றிப் பாடி மகிழ்ந்துள்ளனர். ஆண்டவனின் அருளைப் பெற அவரோடு வாதாடி, உரிமை கொண்டாடும் தோரணையும் கல்பனையின் நடைகள்கூட ஒன்றாகவே இருக்கின்றன!

தன் நிலையைப்பற்றி வர்ணிக்கும் பாடலில்

" பட்டி கொட்டு ரீதி, பக்ஷிம்சி திரிகிதெ "

என்றார் தியாகராஜர்.

என்னை நலிவிக்கும் எண்ணில் குறைதடுக்கும்
முன்னைப் பேரெயில்சார் முதல்வா நின் அடைக்கலமே

* அருணகிரிநாதரும்,

" பக்தி பூணமலே பட்டி மாடானநான்

எனக் கூறியுள்ளார்.

" கட கட நாசரிதமு, கர்ணகடூரமு, எடுல ப்ரோதுவோ!"

எனவும்,

" மாபாதகனுகிய நாயேனை யாளுவ தெந்த நாளோ ?"

என்றும்,

" காமித பலமுலு ஒஸகெடு ராமா!"

என்றும்,

" அடியவ ரிச்சையில் எவையெவை யுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே!"

என்றும், அவர்கள் பாடல்களில் இதேபோல் இன்னும் எண்ணிலடங்கா ஒற்றுமைகள் அமைந்திருக்கின்றன.

வடமொழியில் வல்லவர்கள் என்பது இருவர் கவிகளி லிருந்தும் தெளிவாகின்றன. தனி வடமொழியிலேயே இயற்றிய பாடல்களும் உள்ளன. வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசங்களி லிருந்து உயர்ந்த கருத்துக்களும் உதாரணங்களும் அடங்கி யிருக்கின்றன. வேதாந்த ஞான ரகசியத்தின் உண்மைகளைப் பாமரனும் உணரும் வண்ணம் நன்கு தெளிவாக்கி யிருக்கின்றனர். நாம் சன்மார்க் கத்தை யடைந்து, நல்வாழ்வும் ஈஸ்வர கடாக்ஷமும் பெற சுலபமான வழிகளைக் கூறும் தீபங்களாய் ஒளிர்கின்றன.

பெறுதற் கரிதான மானிடப் பிறவியை யடைந்த நமக்கு, புலன் வழியே நம் மனதானது வீணில் ஈடுபடுவ தால் வரக்கூடிய கஷ்ட நஷ்டங்களையும், நம் மனதிற்கு சுபாவமா யமைந்துள்ள துற்குணங்களையும், உலகத்தில் நடக்கும் மோசடிகளையும் நம் மனதில் பதியும் வண்ணம் எடுத்துக் காட்டி, மேற்கொண்டு நாம் கடைத்தேற வேண் டிய மார்க்கத்தை அறிவிக்கும் வழிகாட்டியாயு முள்ளன.

ஆண்டவனை யன்றி வேறொருவரையும் புகழ்ந்து பாடியதில்லை. நரஸ்துதி செய்வதை வெறுத்தனர். அறி

கள்ளிச் செடியுடரென் காடாகும் வாழ்வழிய
கொள்ளிக்காட் டில்வாழும் கோநின் அடைக்கலமே

வின் பயனை அவர்களின் இஷ்ட தெய்வத்திற்கே காணிக்கை யாகச் செலுத்தி மகிழ்ந்தனர்.

இசைக் கலைக்கு ராகமும், லயமும், இரு நேத்திரங் களைப்போல் மிக முக்கியமானவைகள். இவற்றுள் மிக நுட்பமாயும் அரியதாயுமுள்ள அநேகம் ராகங்களை நாம் நன்கு பயின்று உணரும் வண்ணம், அவைகளில் அநேகம் கீர்த்தனைகளை தியாகையர் இயற்றியிருக்கிறார். அருணகிரி நாதர், தம் பாடல்கள் மூலம் இசைக் கலைக்கு மற்றொரு முக்கிய அம்சமான லய விந்யாசத்தை நமக்கு உணர்த்தி யிருக்கிறார். நுட்பமான தாளங்களிலும், அநேக நடை பேதங்களிலும், அதிமதுரமான சந்தக் கவிகள் ஆயிரக் கணக்கில் அருளி யிருக்கிறார். இருவர் பாடல்களையும் நன்கு கற்றுணர்ந்த இசை வல்லோர்கள், ராக லய வின்யா சங்களில் நிகரற்று விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

நம் பாரத நாட்டிலும், மற்றும் வெளிநாடுகளிலும் அருணகிரியார் திருப்புகழும், தியாகையர் கீர்த்தனங்களும் யாவராலும் பாராட்டப்படுவதுடன், வளர்பிறை யென்ன எங்கும் பரவி வளர்ந்து வருகின்றன. சகலராலும் ஆவ லுடன் பாடப் பெற்று, படிப்போர் கேட்போர் யாவருள் ளத்திலும் அன்பையும், பக்தியையும் புகட்டி சமரஸ சன் மார்க்கத்தில் ஈடுபடச் செய்து, சகல செளபாக்கியங்களை யும் அளித்து வருகின்றன.

சுபம்

பழநித் திருப்புகழ்

விரிவுரை

(குகஸ்ரீ)

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி

இன்றன்று தோன்றியது என்றும் இருந்ததெனும்
குன்றுப்பூர்க் காவலனைக் காண்பதுவும் என்றேயோ

ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்,
ஏறுமயில் வாகன!குகா! சரவணா! எனது
ஈச!என மானமுன தென்று மோதும்
ஏழைகள் வியாகுலமி தேதென விஞவிலுனை
யேவர் புகழ்வார் மறையும் என்சொலாதோ;
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே!
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா!
சீறிவரு மாறவுணன் ஆவியுணும் ஆனைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடம்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தா!முருக! தம்பிரானே!

(நீறுமுதல் வேளே என்பதுவரை.)

(பதவுரை.) நீறு படு மாழை பொரு மேனியவ - திருநீறு மலர்ந்த பொன் போன்ற திருமேனியை உடையவனே!; வேலா - ஞான சக்திதரா!; அணி நீல மயில் வாக - அழகிய நீல நிற மயி லூரும் பெருமானே!; உமை தந்த வேளே - உமையாள் அருளிய உயர் பொருளே!;

(நீசர்...மடிய...விடும்...வேலா.)

நீசர்கள் தமோடு எனது தீவினை எலாம் மடிய - நீசர்களான அவுணர்களுடன் (அநியாய) எனது தீவினைகள் அனைத்தும் அழிய; நீடு தனி வேல் விடு மடங்கல் வேலா - கைவேல் திருக் கரத் தில் இருப்ப, நெடிது உயர்ந்த வேல் ஏவிய நின்மலா?

(சீறிவரும்...அவுணன்...ஆவியுணும்...துணைவா.)

சீறி வரும் மாறு அவுணன் - (பாம்பு போல்) சீறி (மேலேறி) எதிர்த்து வந்த பகைமுகமான கயமுக அவுணனுடைய;

ஆவி உணும் ஆனை முக தேவர் துணைவா - ஆன்மாவை அடக்கிய (பிரணவ) யானை முகமான தெய்வக் கணபதியின் பின் வந்த பெருமானே!;

(சிகரி...தம்பிரானே.)

சிகரி அண்ட கூடம் சேரும் அழகு ஆர் பழநி வாழ் குமரனே- அண்ட முகட்டைச் சிகரங்கள் அளாவும்படி உயர்ந்த அழகும்

ஆசை வலிகுறைத்தே அன்பர்க் கருள்கின்ற
நேச வலிவலத்தின் நிழல்தங்கி ஆவேனோ

நிறைவுமான பழநிப் பதியில் என்றும் வாழும் குமரேசா!; பிரம தேவர் வரதா - பெரியோனுன அயனுக்கு (ப் படைக்கும் அரிய தொழிலை) அருளியவனே!; முருக - என்றும் இளம் பூரணனே!; தம்பிரானே - நம்பியவரை யகலாத நம்பனே!;

(ஆறுமுகம்...சொல்லாதோ)

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறு முகம்—, என்று - என்று ஆறுதரம் கூறி;

பூதி ஆகம் அணி மாதவர்கள் - திருநீறு பூசும் திருமேனிய ரான தலைசிறந்த தவசிகளுடைய;

பாத மலர் சூடும் - திருவடிக் கமலங்களை (த் தம்) திருமுடி மேல் சூடிக்கொள்ளும்;

அடியார்கள் பதமே துணையது என்று நாளும் - என்றும் (நலம் சிறந்த) அடியவரது திருவடிகளையே துணை யென்று நம்பி;

ஏறு மயில் வாகன - ஏற்றம் பெற்ற மயில் ஏறும் இறைவா! குகா - உள்ளக் குகையில் உறைபவனே!; சரவண—, எனது ஈச - சிறியேன் பெற்ற செல்வமே!;

என மானம் உனது என்று மோதும் - எனது மானம் உன் பொறுப்பில் உளது என்று (இடையருது) மோதி முறையிடும்;

ஏழைகள் வியாகுலம் இது ஏது என வினவில் - எளிய பக்தர் கள் கவலை இது, (ஒழியாமல்) எதனல் இன்னும் இருக்கிறது என்று (பிறர்) வினவும் அளவு இருந்ததாயின்;

உனை எவர் புகழ்வார் - (குறை கூறுவது அன்றி) உன்னைப் புகழ்பவர்கள் யார் ஐயா!;

மறையும் என் சொலாதோ — (ஏழை பங்காளன் எனும் என் வாக்கும் பொய்த்ததே என்று, உம்மைப் பார்த்து அவ்) வேதங் களும் என்னத்தான் சொல்லாது, (எ—று).

விரிவுரை

மாயை தந்த உடல், கருவில் தங்கி இருளடைந்தது; உயிர் இதனில் உயிர்க்கிறது. இயற்கைத் திருமேனியன் இறைவன்; நீறு பூத்த நெருப்பைப் போல், அவன் பொன் வண்ணத் திருமேனியில், விபூதி என்றும் விளங்குகின்றது. இதனை, 'நீறுபடு மாழை பொரு மேனியவ' என்பதில் நினை ஊட்டினர்.

பாழும் அஞ்ஞானம் பற்றியவர் நாங்கள்; பரம ஞான சக்தியை, வேல் உருவில் பற்றியவன் நீ.

சினமகன்ருர் சித்தம் சிவமாகத் தேவியெனும்
அனம்தங்கு கச்சினத்தில் அடியேற் கிடனுளதோ

ஆவரண சக்தியால், மறைப்படைந்த மாபெருங் குற்ற வாளிகள் நாங்கள்; மாயாதீதன் என்பதற்கு ஏற்ப, மயில் உருவான அச் சக்தியை அடக்கி, இனிது அதன் மேல் இருப்பவன் நீ.

மண் பெண் பொன்னில் மயங்குபவர் யாம்; அதனால், பிறவி எங்களைப் பின்னிப் பிணைத்தது; வீண் படுத்தும் மாயையை வென்று, வீட்டு விருப்பம் எங்கட்கு விளைவிக்க, **உமையாள் அருளிய உயர்வினன் நீ.**

நிசியில் விழித்தவர்; நியதி கெட்டவர்; நீச்சு நாற்றம் நீடிக்கும் ஐம்பொறி அறிவினர் பலர் உளர்; அவர்களொடு உறவு கொள்ள அவாவுகின்ற என் பாவ வினைகளும் பல வுள. அவர்களும் அவைகளும் அடியொடு அழிய, அநாதி நித்திய அருமை யுடைய, ஒப்பானதும் மிக்கானதும் இல்லாத, வேலை யேவும் விமலன் நீ! **நீடியவேல் செயல் செய்ய நீங்க, என்றும் நீங்காத குலிர் ஞான சக்தியைக் கரத் தில் கொண்டவன் நீ!**

ஆணவச் சார்பால் அவதியடைபவர் யாம்.

பகைமுகமான ஆங்காரக் கயமுகன், ஒரு காலத்தில், பலரைப் பாம்பெனச் சீறிப் பாதித்தான்; ஆணவ சொருப மான அவனை, அடக்கினர் தெய்வ ஓங்கார ஆனைமுகர்.

பெரிய கயமுகன் பெருச்சாளி யானான்; உவந்து கணபதி அவனை ஊர்தி யாக்கினர்.

அதுபோல், அகங்காரச் சூராதியரை அடக்கிய ஓங் காரப் பொருள் நீ! மாபெரும் சூரன் மயிலானான்; ஊர்தி யாக்கி அவன் மேல் ஏறி உவந்திருக்கின்றாய்! அதனால், **'ஆனைமுக தேவர் துணைவா'** என்று, ஆர்வத்தொடு உலகம் உன்னை அழைக்கின்றது. போகமும் அறியோம்; யோகமும் உணரோம்; பொய்த்து வாழ்வு புழுங்குபவர் யாம்.

வராக கிரியில், பழனிமலை வாழ்கிறது; வந்து வணங் கினோர் வாழும்படி, அம்மலை மேல், என்றும் குமரனாய் இருக்கின்றாய் நீ!

நமக் குமாராய என்று சிறக்க உருவேற்றுகின்றார் சிவபெருமான். பதினாறு வயதுடைய குமாரத் திருவுருவை,

---

ஆளில்லை நெல்லெடுக்க எனும்சுந்த ரற்கருளும்
கோளிலியின் தாணிழலின் குதூகலமா நிற்பேனே

இதயங் கொண்ட இரு தேவியரும், சரவணபவா என்று ஏத்திப் போற்றி யிருந்தனராம். இவ் வரலாறுகளால், யோக நுட்பமான குமர வடிவம், போக ரூபமும் ஆகிறது. அதனால்,'**பழநி வாழ் குமரனே**' என்று ஏத்த இருப்பவன் நீ!

என்னென்னவோ பிரமன் எங்கள் தலையில் எழுதியுளன். எவரினும் பெரியோன் ஆதலின், அந்த நான் முகன், பிரமன் என்னும் பெயர் பெற்றான். உலகைப் படைக்கும் தொழிலை, அவனுக்கு உதவியவன் நீ! அதனால், **பிரம தேவர் வரதா** என்று உலகம் உன்னைப் பேசுகின்றது.

பாலராகி, குமாரராகி, தருணராகி, கோலை ஊன்றிக் குனிந்து எழுந்து, காலன் மாய்க்க, பிணம் என்று பேர் பெறுவம் யாம்! என்றும் இளம் பூரணன் நீ! ஆதலின், **முருக முருக முருகா** என்று உன்னை வாய்விட்டழைக்கின்றது வையகம்.

அடிமை யாம்; ஆண்டான் நீ ஆதலின், **தம்பிரானே!** என்று ஆர்வத்தொடு உன்னை அழைக்கின்றோம் என்றபடி.

பிரியாதவன் என்பது, பிரான் என மருவியது; தனக்குத் தலைவன்தானே ஆனவன்; மற்று, ஆன்மாக்களைவிட்டு அகலாதவன் என்ற பொருளையும், இனிது கொண்டது அந் நாமம்.

ஐந்தொழில் புரியும் ஐம்முகம்; சிற்சத்தி முகம், அந்த ஐம்முகங்கட்கும் மூலம்; ஆக முகம் ஆறு.

ஆறு திசையிலும், சிதாகாசமாக அமர்ந்த முகம் ஆறு. ஆறு சமயக் கடவுள் யாம் என்று, அறிவிக்கும் முகம் ஆறுமுகம்.

"வெவ்வசுரர் குலத்தை மாய்க்க
அஞ்சுமுகம் அமையா என்று ஆறுமுகமாக எழுந்
தருளினனே"

என்று குற்றாலப் புராணம் குறிப்பிடுகின்றது.

'ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்று; ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்று; கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்று; குன்றுருவ வேல் வாங்கி நின்ற

காய்வாரே ஆயிடினும் கருதில் கதியருளும்
வாய்முரா! நினையே வாழ்த்துநெறி தாராயே

முகம் ஒன்று; மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று; வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்று;' ஆஹா! இப்படி ஆறுமுகம் என்று ஆறுதரம் அழைத்தால் தானே ஆநந்தம் பிறக்கும்!

ஆறுமுகம் அவதரித்த இடம் (கங்கை) ஆறு; உவந்த இடம் ஆறுபடை வீடு; மூலாதாரம் முதல் இருந்த இடம் ஆறு. மந்திரம் முதலாக அவனை அகப்படுத்தும் வழிகள் ஆறு. உருவேற்ற, ஆதரவு காட்டும் எழுத்து ஆறு.

திருப்புகழ், அலங்காரம், அநுபூதி, வகுப்பு, அந்தாதி, திருமுருகாற்றுப்படை யெனும் அருள் நூல்கள் ஆறு.

நீறுபடு மாழை பொரு மேனியவன் நிமலன்; இனியன் திருவுருவை எண்ணி, ஆறுமுகம் என்று ஆறுதரம் கூறி, பூதியை மேலோர் பூசிக் கொள்வர்.

வி - சிவம்; பூ - பாவனை; தி - தியானம்; நீறு பூசி, நீறணிந்த நிமலனை இடையறாது நினைத்திருப்ப, சிவத்வ பாவனை சித்திக்கும் என்பது, இங்குள்ள நுட்பம். அந்தத்தில் நீறென்றார். ஆதியில் பூதி என்றார். இது உய்த்து உணரும் ஒரு இடம்.

'சித்தாந்த மெய்ச்சமய சிவநெறிக்கு வித்தாகி...
பெத்தாந்த கணத்தவர்க்கும் எவ்வெவர்க்கும் பெரு
வாழ்வு பெருக்கி, மும்மைக்
கொத்தாந்த மலமுருக்கும் குறிகாட்டி, நித்தியமாய்க்
கொண்டார்க்கு உற்ற
பித்தாந்த மதப்பிணியைத் தபுமருந்தாம் திருநீற்றைப்
பேணி வாழ்வாம்'

என்பது சித்தாந்தம். பூதி - பெருஞ் செல்வம் என்றும் பொருள் பெறும்.

"ஐயும் தொடரந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று
வேண்டுவன்யான்;
செய்யும் திருவொற்றி யூருடையீர்! திருநீறும் இட்டுக்
கையும் தொழப் பண்ணி ஐந்தெழுத்து ஓதவும்
கற்பியுமே!"

என்று பாடிக் கதறினர் பட்டினத்தடிகள்.

உழிகாட்டும் தெய்வ உளவுபல ஓரென்று
வழிகாட்டும் மறைக்காட்டில் வந்துவந்து வாழ்வேனே!

உடம்பு ஒரு தேர்; அதனில் இருப்பவன் ஆத்ம குமாரன். இருவினைக் கயிற்றில் இணைத்த மனமாம் குதிரை, தேரை யீர்த்துச் செல்கிறது. தேர் செலுத்துவோன் திரு வருட்பாகன். தேரும் பரியும் நேர்வழி செல்ல, ஆறு முகத்தை எண்ணி, ஆறுமுகம் என்று வாயால் ஆறுதரம் கூறி, பூதியை ஆகத்தில் பூசுகின்றார் அறவோர். இதுதான் மாபெருந் தவ மார்க்கம்; மதியை அவ்வழியிற் செலுத் தியவரே **மாதவர்.**

எவ்வளவு முயன்றாலும், ஆறுமுக நுட்பம் அறிய முடியவில்லையே! அறிந்த மாதவர் பாதமலர் சூடுவம்; அவர் கள் ஆசியின் மூலம் அருளைப் பெறுவம் என்று, அன் பொடு எண்ணுகின்றார் **அடியார்கள்.**

இறப்பு பிறப்பு இரண்டற்கும் அஞ்சினவர் அந்த அடியவர்; வாய்மை அவர் மனநிலையும் எமக்கு வாய்க்க வில்லையே! மறதியும் நினைவும் மாறி மாறி வருகின்றனவே! நல்லாரோடு இணங்கி யிருப்பதுவும் நன்றன்றோ! கனிவு மிக்க அந்த அடியவர் **பாதங்களே கதி** என்று எண்ணியுளம்.

அதனால், நாங்கள், அடியார்க்கு **அடியார் ஆகின்றோம்.** ஆண்மையுடையது; எங்கும் நிறைந்தானை, ஏந்தும் பேறும் வீரமும் பெற்றது. நீலகண்டம் என்னும் நீல மயில் மேல், அகண்டன் என வருகின்ற நின்னை, **ஏறு மயில் வாகன** என்கிறோம்.

கனிந்த அடியார் பாதமே கதி என்று, நம்பினவர் நாங்கள். இன்பமான அவர்தம் **இதய குகையில் இருப் பவனே** என்று, ஆர்வத்தொடு உன்னை அழைக்கின்றோம்.

ச - மங்கலம்; ர - ஈகை; வ - போர்; ந - சாத்விகம் என்பர். பொங்கும் மங்கலம் பொலிவிப்பவனே! கேட்டது எல்லாம் அருளும் கேடில்லாத் தாதாவே! இருளகற்றும் பேரொளியே! அமைதியை என்றும் அளிப்பவனே! என் னும் பொருளில், உன்னை **சரவண** என்று சால்பொடு விளிப் போம்.

அறியாமை வறுமையை அழிக்கும் எம் பெரும் செல் வமே! என்னும் கருத்தில், **எனது ஈசா** என்கிறோம்.

வெள்ளப் பிறவிக்கோர் மெய்ப்படகாம் நல்லருள்சேர்
கொள்ளம்பூ தூர்வந்தே குதுகலித்து நிற்பேனே

ஏழைகள் நாங்கள். எங்கட்கு விளையும் இடர்ப்பாடு கள் பல. நீங்காமல் மேலும் அவைகள் நெருக்கடி செய்யு மேல், கனிந்து போற்றினீர்களே! அந்தக் கடவுள் ஏன் உங்களைக் கை விட்டது? என்று, நாற்புறம் ஊரார் நகை யாடுவரே!

உடல் பொருள் ஆவியை ஒப்படைத்ததுபோல், உயர்ந்த எங்கள் மானத்தையும் உன்னிடமே ஒப்படைக் கிறோம்! காவாவது மேலும் கைவிட்டால், மானத்தின் முன் அவம் கலக்கும்; அப்படி அவமானம் நேர்ந்தால், உனக்குத் தான் அகௌரவம்!

அதுமட்டும் அல்ல. எம்மைக் கை விட்ட உன்னை, எதிர் நாளில் எவர் புகழ்வர்? உன்னை இதுவரை ஏத்திய வேதங்கூட, எதிர் நாளில் எதிர்ப்பை எழுப்பும் என் கிறேன்! இந்த வம்பெல்லாம் எதற்கு? இப்போதே வந்து எம்மை ஏற்றுக்கொள் பிரபு என்பது குறிப்பு.

இங்ஙனம் பலபடி ஏத்தும் இத் திருப்புகழ், எவர் பாராயணத்திற்கும் ஏற்றது அல்லவா என்று, இன்பம் கொள்கிறது நம் இதயம்!

(1) முருகன்; (2) முருகனை எண்ணும் மாதவர்; (3) மாதவர் பாத மலர் சூடும் அடியார்; (4) அடியார்க்கு அடியார்; (5) இதைப் பாட்டில் பாடும் அருணகிரி நாதர்; (6) இதை சிரவணிக்கும் பக்தர்கள் என இவர்களும் அறு வராதலை அறிவிக்கும் திருப்புகழ் இது. ஆறுமுறை ஆறு முகம் கூறலின், 6×6=36; முப்பத்தாறு தத்துவ தேவதை களை அதிர்ஷ்டித்து நிற்கிறது ஆறுமுகம் என்றும் அறிய லாம் அல்லவா!

வாழ்க திருப்புகழ்!

வித்யாபதி

(கிருஷ்ணமூர்த்தி)

சலியாத உழைப்பு; சதா சிரித்த முகம்; குறிப்பறிந்து வேலை செய்யும் நற்குணம். சிணுங்கல், சோம்பேறித்தனம் இரண்டும் எட்டிப் பார்க்கக்கூட இடமில்லை. உக்னு என் என்றால் எண்ணையாய் நிற்பான். இருந்தாலும் வித்யாபதி யின் மனைவிக்கு இவன் வேலை அருவருப்பையே அளித்தது. கடனுக்கு இவன் வேலை செய்வதாகப் பட்டது. செய்வன சிலவற்றையும் திருந்தச் செய்வதில்லை என்பது அவள் குறை. திருப்தியே செய்ய முடியாத சில மனிதர்களில் வித்யாபதியின் மனைவியும் ஒருவர். எஜமானி அம்மாளின் கோபத்தையும், கொடுஞ் சொற்களையும் உக்னு பொருட் படுத்தியவனாகவே தெரியவில்லை. வித்யாபதிக்குப் பணி விடை செய்வதில் அவனுக்கு இருந்த ஆர்வத்திற்கு அளவே இல்லை.

ஒரு நாள் தொலை தூரம் நடந்து செல்ல வேண்டி இருந்தது. வித்யாவதியுடன் உக்னுவும் சென்றான். நடு வழி; நல்ல வெய்யில்; வித்யாபதிக்கு நாக்கு ஒட்டி உலர்ந் தது: தாளாத தாகம். கண்ணுக்கெட்டியவரை கிணறோ ஓடையோ இல்லை. தள்ளாடி வீழ்ந்தார். "தண்ணீர், உக்னு, தண்ணீர்" என்றார். உக்னு சுற்றிச் சுற்றித் தேடி அலைந்தான். தண்ணீரே இல்லை. வெறும் கையுடன் திரும்பி வந்தான். தன்னாலானவரை எஜமானரைத் தேற்றினான். தாகத்திற்குத் தேறுதல் மொழிகளால் என்ன பயன்? வித்யாபதியின் உள்ளம் கலங்கியது.

"உக்னு! இன்னும் இரண்டு நிமிஷத்தில் தண்ணீர் கிடைக்காவிட்டால் நான் இறந்தேன்."

உக்னு செய்வதொன்று மறியாமல் விழித்தான். "ஐயா, ஐயா, என்ன செய்வேன்" என்று கதறினான். "தண்ணீர்! தண்ணீர்!" வித்யாபதியின் குரல் உள்ளடங்கிவிட்டது. உக்னு பயித்தியம் பிடித்தவன்போல் எழுந்து ஓடினான்.

இல்லிக் குடமான இவ்வுடலம் வீழுமுனே
நெல்லிக்கா அத்தனை நீஏற்றுக் கொள்ளாயோ

ஒரே விநாடியில் திரும்பி ஓடி வந்தான். கையிலே ஒரு குவளை. அதிலே பால் போன்ற தெளிந்த குளிர்ந்த நீர். ஆர்வத்துடன் பருகினார் வித்யாபதி. போன உயிர் திரும்பி வந்தது. மெதுவாக எழுந்து உட்கார்ந்தார். மயக்கம் மறைந்தபின், வித்யாபதியின் உள்ளத்தே ஒரு பெரும் சங்கை தோன்றியது.

"உக்னு! இந்தத் தண்ணீர் கங்கைநீர் மாதிரி இருக்கிறதே. இங்கு இது இப்போது உனக்கு, எப்படிக் கிடைத்தது? உண்மையைச் சொல்."

உக்னு சற்று நேரம் மௌனமாய் இருந்தான். வித்யாபதி விடுபவராய் இல்லை.

"உக்னு, இவ்வளவு காலம் என்னிடம் வேலை செய்திருக்கிறாய். உண்மையைச் சொல்லிவிடு."

"உண்மைகண்டிப்பாய்தெரிந்துதான் ஆகவேண்டுமா?"

"ஆம்" என்று அழுத்தமாய் பதில் சொன்னார் வித்யாபதி.

"உண்மையைச் சொல்லுகிறேன். ஆனால் இரண்டு ஷரத்துக்கள். என்னைப் பழையபடியே வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும். நான் சொல்லும் உண்மையை யாருக்கும் வெளியிடக் கூடாது. சொன்னால் நான் உடனே உங்களைவிட்டுப் போய்விடுவேன்."

"சரி."

உக்னு சிரித்தான். வித்யாபதி கண்ணிலே மின்மினி பறந்தது. பெரும் வெளிச்சம். நடுவே பொன் போன்ற மேனி; புலித்தோல்; விரிசடை; அதன் மேல் சந்திரன்; கையிலே சூலம்; கண்ணிலே கருணை; உதட்டிலே புன்னகை; நெற்றியிலே நீறு; தோளிலே பாம்பு; அபயஹஸ்தம்; ஓம் ஓம் என்ற ஒலி". "உன் அன்பிற் கடிமைப்பட்டு உன் சேவகனாய் இருப்பவன் நான்தான் வித்யாபதி" என்று ஒரு சொல்.

மின்னல் வெட்டென மறைந்தது. மயங்கி விழுந்தார் வித்யாபதி; தட்டி எழுப்புகின்றான் உக்னு. எது பொய்; எது மெய். வித்யாபதிக்கு ஒரே தடுமாற்றம்.

ஆட்டிப் படைத்தவினை; அம்மஇது வாழ்வாமோ?
நாட்டியத் தான்குடியில் நண்ணிநலம் அண்ணுவனே

வீடு திரும்பினர். உக்கு பழைய உக்குவாகவே இருந்தான். அதே ஆர்வம்; கருத்தில் அதே கருத்து. ஆனல் வித்யாபதி முற்றும் மாறிவிட்டார். உக்குவுக்கு வேலை செய்வதில் இவர் முனைந்தார். யார் யாருக்குப் பணிவிடை செய்வதென்று பெரும் போட்டியாய் விட்டது.

வித்தியாபதியின் மனைவியாருக்கு இதெல்லாம் ஒரே விசித்திரமாய் இருந்தது. தன் கணவருக்கு ஏன் இப்படிப் புத்தி மாறிப் போகவேண்டும். உக்குவுக்கு இவர் வேலை செய்வதாவது. உக்குவின் மேல் இருந்த அவளுடைய பழைய வெறுப்பு பன்மடங்கு அதிகமாகியது.

ஒரு நாள் வித்யாபதி பரிந்து பரிந்து உக்குவுக்கு வேலை செய்தார். மனைவிக்குக் கோபம் பற்றி எரிந்தது. அருகிலே இருந்தது ஒரு கழி. கோபம் தீர அக்கழியினல் மொத்து மொத்தென்று உக்குவை அடித்தாள். உண்மை அறிந்த வித்யாபதியின் உள்ளம் அலறியது.

ஆண்டவனைத் தன் மனைவி அடிப்பதா? வில்லாலும், கல்லாலும், பிரம்பாலும் அடிபட்ட எம்பிரான் கழியினல் அடி வாங்கினர். மனைவியைத் தடுக்க உண்மையைச் சொல்ல வேண்டும். ஆனல் அந்த ஷரத்து இருக்கிறதே. உடனே தன்னை விட்டுப் போய்விட்டால்? அதைத் தாங்க முடியாதே.

அடிமேல் அடி வெகு வேகமாய் விழுந்தது. உக்கு உடம்பெல்லாம் தழும்பு. வித்யாபதியால் தாள முடியவில்லை. ஓடித்தன் மனைவியின் கையைப் பிடித்தார்.

நிறுத்து! அடி படுவது யார் என்று உனக்குத் தெரியவில்லை. உக்கு வெறும் மனிதன் அல்ல. இவன் மலைமகள் மணளன்; விரிசடை வேந்தன். பரவெளியிலே நிருத்தமிடும் நம்பன்."

சொல்லி முடிப்பதற்குள் மறைந்தான் உக்கு. திகைத்தார் வித்யாபதி; வருந்தினின்ருள் அவர் மனைவி.

வாரம் ஒன்று சென்றது. வித்யாபதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. உக்கு இல்லாமல் இனி வாழ முடியாது. கங்கையிலே இறங்கி அவனை அடைவது என்று முடிவு

நாத!கா ருயல் நம்பா ! உயிர்களுக்கா
ஏதமகல் வேதம்சொல் எந்தாய் அடைக்கலமே

கட்டினார். நண்பர் சிலர் சூழ கங்கையை நோக்கி நடந்தார். 44 மைல்கள் நடக்க வேண்டும். அவர் வாயினின்று ஒரே ஒரு வார்த்தை திரும்பித் திரும்பி ஒலித்தது. "என் உக்ணா என்னைப் பிரிந்து போய்விட்டான்."

"இன்னும் கங்கை எத்தனை மைல்?" நாலு மைல் என்றார் நண்பர்.

"கங்கையைத் தேடி நாற்பது மைல் நடந்தேன்! ஆண்டவன் அருளுண்டேல், என்னைத் தேடி ஏன் கங்கை நாலு மைல் வரக்கூடாது?" அதே இடத்தில் உட்கார்ந்தார் வித்யாபதி. பரமனிடத்தில் ஒன்றியது உள்ளம்.

சூரியன் உதித்தான். பட்சிகள் பாடின. அருகே அசைந்து அமைதியுடன் ஓடிவந்தாள் கங்கை. அன்னையை எண்ணிய வண்ணம் தண்ணீரிலே இறங்கினார். கங்கையும் மறைந்தாள். வித்யாபதியும் மறைந்தார். நண்பர்கள் நோக்கியவாறே நின்றனர்.

(ஹிந்தி கலைஞர் வித்யாபதியின் வாழ்க்கையிலோர் பகுதி)

PANCHASEELA OF BHAKTI

Lord Sri Krishna, assured of his disciple Sri Arjuna, as being free from all envy, disclosed to him five great declarations which may be said to constitute the Panchaseela of Bhakti. The first may be said to be contained in sloka *31 Chap VI.* In whatever ways a Bhakta may live, if he practises Bhakti, that is, if he is devoted to **the lord as existing in all beings,** "Still He lives in me." To live in God one must see the *Lord as immanent in* all beings. **The next great declaration** is what is contained in Chap. VI, sloka 30. If the Bhakta sees **the Lord in all beings, and sees all beings in the Lord,** such a devotee *is never lost* to God and God is never lost to him. Such a man lives in the immediate protection and company of the Lord. The third declaration may be said to be contained in Chapter XII *sloka 8.* This *explains* what is meant by living

in God. The fixing of the **mind and intellect on God** achieves the benefit of a life in God. The heart and the brain are the two vital factors of life. To love God and to direct your intelligence on God will bring about a divine life on earth. A man becomes what he loves and what he thinks. Thoughtful devotion is what is required to achieve a living in God. The fourth declaration is that while the Lord has no discriminations or partialities regarding the lives in the world, yet, in the case of a person who is **devoted to him and does Bhajan**, the life of the Lord and the life of the Bhakta become intertwined, the one being in the other and vice versa. Both Bakti the internal condition of the mind, and Bhajan the external expression of it, are required to achieve this result. God lives in this Bhakta and this Bhakta lives in God. By this sloka Lord Sri Krishna may be said to have given the **divine charter** of emancipation to the world of creatures at large.

The fifth and the very important declaration is that **by devotion and Bhakti alone** is it possible to know him, **to see Him and to enter into Him**. This is contained in Chapter XVIII sloka 54. Such a Bhakta does all the work that falls to be done by him as God's work, regards God as the most supreme entity devoid of hatred to other beings, gives them of his love and is devoid of ungodly worldly attachments. Love for all living beings as the habitation of God, leading to universal service, and the confirmed faith in the existence of God as our only refuge, will make the earth into a haven of bliss. The Lord has indicated the way. Blessed are they that follow it.

Om Tat Sat.

Thiruppugal Mani

அடுத்துச் செல்வர் தமைப்பேணி
    அருஞ்செந் தமிழ்ப்பா ஓதாமல்
தொடுத்துப் பன்மா மலர்சூட்டித்
    தொண்டா வார்க்குத் தொண்டாகி
விடுத்துக் கள்ள வினையனைத்தும்
    வேற்காட் டின்கண் வாழ்வோரைக்
கடுத்துக் கால படரென்றும்
    காணார் கோபம் பூணாரே.

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீ
நெ. 1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
சிவநேயச் செல்வர்கள் ,,			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18